



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளி/வலைப்பாடு றோ.க.த.க.பாடசாலை

# மணிவிழா

## சிறப்புமலர்


# 60th
Aniversary

# "அறுபதுகளில் அனற்றா"

# 2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளி/வலைப்பாடு.றோ.க.த.க.பாடசாலை ஆசிரியர் குழாம் - 2023




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்க்குழு

திரு.ம.மரியராசா
அருட்சகோதரி.கத்தரீன் மரியதாஸ்
திரு.ச.ஜெசிந்தன்
திரு.கோ.லக்ஷன்

## முகாமைத்துவக்குழு

திரு.ம.மரியராசா
திருமதி.ம.கிளமன்ரீனா
அருட்சகோதரி.கத்தரீன் மரியதாஸ்
திருமதி.அ.கொன்சிய ரூபராணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக்கீதம்

எமது இன்பத் தமிழ்மொழி வாழ்க – எமது
ஈழத்திருநாடு வாழ்க
வளமிகு வலைப்பாடு ஒளியுடன் வளரும் - எம்
வித்தியாலயம் என்றுமே வாழியவே

அரியநற் கல்வியும் கலைகளும் - ஒழுக்கமும்
அன்புடன் எமக்கு வழங்கியே நிற்கும் - அதிபரும்
அவருடன் ஆசிரியர்களும் - என்றும்
சிறப்படன் வாழிய வாழியவே

அன்னையின் அணைப்பும் இறைவனின் அருளும் - அலைகடல்
நிறைபொருள் தினம்தினம் பெருகிட - இன்றைய
சிறுவரை தலைவர்களாக்கிடும் -எம்
வித்தியாலயம் என்றுமே வாழியவே

நாற்றிசையெங்கும் நின்புகழ் ஓங்கிட நலமுடன்
மாணவர் கலைகளைக கற்றிட பண்புடன்
அறிவுத் தலைவர்கள் தோன்றிட – என்றும்
சிறப்புடன் வாழிய வாழியவே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| **• வாழ்த்துச்செய்திகள்** | |
| 1. வலயக் கல்விப் பணிப்பாளர் | 1 - 2 |
| 2. கோட்டக்கல்வி பணிப்பாளர் | 3 |
| 3. முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் | 4 |
| 4. முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் | 5 |
| 5. அதிபரின் வாழ்த்துச் செய்தி | 6 - 7 |
| 6. உப அதிபரின் வாழ்த்துரை | 8 |
| 7. அருட்பணி லியான்ஸ் அன்ரனிதாஸ் அடிகளாரின் ஆசிச்செய்தி | 9 - 10 |
| 8. யாழ் திருக்குடும்ப மாகாண முதல்வரின் வாழ்த்துச் செய்தி | 11 - 12 |
| 9. பாராட்டி வாழ்த்துகின்றோம் | 13 - 14 |
| 10. பாராளுமன்ற உறுப்பினரின் வாழ்த்துச் செய்தி | 15 |
| 11. வாழ்த்துச் செய்தி | 16 - 17 |
| 12. வாழ்த்துரை | 18 |
| 13. வாழ்த்துரை | 19 |
| 14. அகவை 60 இல் தடம் பதிக்கும் அருட்சகோதரி அனற்றாவுக்கு வாழ்த்துச் செய்தி | 20 |
| 15. பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளரின் உள்ளத்தில் இருந்து | 21 |
| 16. சுயவிபரம் | 22 |
| **• இறைபணியில் அருட்சகோதரி...** | |
| 17. இறைபணியில் தன்னைக் கரைத்த ஆசிரியத் துறவி | 23 - 24 |
| 18. "அழைத்தவனை அனுபவித்த அருட் சகோதரி அனற்றா" | 25 - 26 |
| 19. ஆசான்களுக்கு எம் நன்றிகள் | 27 |
| **• மாணவர்களின் அன்பில்...** | |
| 20. ஆசான் யார்? | 28 |
| 21. பணி ஓய்வு | 29 - 30 |
| 22. அர்த்தம் நிறை அர்ப்பண வாழ்வு | 31 - 32 |
| 23. மகிழ்வின் ஆரம்பம் | 33 |
| **• ஆசிரியர்களின் மணிவிழா வாழ்த்துக்களில்...** | |
| 24. மணிவிழா வாழ்த்துக்கள் | 34 |
| 25. அருள்நிறை சகோதரி | 35 - 36 |
| 26. இடைநிலைக்கல்வியும் வேலையுலகும் | 37 - 47 |
| 27. இயேசுவின் உயிர்ப்பு ஒரு கட்டுக்கதை அல்ல, நீதி அமைதியாக வெற்றி பெறும் என்ற உண்மை. | 48 - 50 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



உயர் விழுமியத்தோடு ஆன்மிகத்தையும் மாணவர் மனங்களில் விதைத்திட உழைத்திடும் அருட்சகோதரி அனற்றா அவர்களின் "அறுபதுகளில் அனற்றா" என்கின்ற மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். கிளி/வலைப்பாடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் கத்தோலிக்க பாட ஆசிரியராகவும், ஆலோசனையும் வழிகாட்டலின் பொறுப்பாசிரியராகவும், பகுதித் தலைவராகவும் விளங்குகின்ற அருட்சகோதரி அனற்றா சிந்தாத்துரை றோச் அவர்களின் பணி நயப்பினையொட்டி வெளியீடு செய்யப்படுகின்ற '60களில் அனற்றா' என்னும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

'தோன்றின் புகழோடு தோன்றுக, அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று' (குறள் 236) என்ற பொய்யாமொழிப் புலவரின் கூற்றிற்கிணங்க, இவர் தனது சேவைக் காலத்தில் மிகவும் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கல்விப் பணியை ஆற்றி மாணவர்களை வளப்படுத்தியமையை சமூகம் என்றும் நன்றியுடன் நினைவுகூரும் என்பது பேர் உண்மையாகும்.

கல்வியும் ஒழுக்கமும் எமது இரண்டு கண்களைப் போன்றன. மாணவர் களினை உயரிய முறையில் வளர்த்தெடுத்து, மேன்மைமிக்க சமூக விழுமியங்களும் நன்னெறிகளும் உடைய சமூகப் பிரஜைகளாக அவர்களை வளர்த்தெடுத்து, சமூகத்திற்கு உவந்து ஆற்றியுள்ள அளப்பரிய பணிகள் பாராட்டுதற்குரியதாகும்.

1995 ஆம் ஆண்டு இப்பணியில் இணைந்த இவர் 28 வருடங்களாக கல்விப் பணியாற்றி கிளி/வலைப்பாடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் இடைநிலை வகுதித் தலைவராக செயற்பட்டு பாடசாலைக் கல்விப் பணியில் இருந்து ஓய்வுபெறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது அறிவும் மனோபாவமும் கடலுக்கு அடியில் அமிழ்ந்து நுனிப் பகுதியை மட்டுமே வெளிக்காட்டும் பனிக்கட்டியைப் போல் அமைதியாகவும், அனுபவ அறிவின் ஆழமாகவும் இருந்து, சக ஆசிரியர்களையும் வழிப் படுத்தும் பாங்கு சிறப்பின் மகுடம் ஆகும். இரண்டு காலகட்டங்களில் (01.10.1995 தொடக்கம் 22.03.1998 வரையும், 04.05.2018 தொடக்கம் 26.07.2023 வரையுமான) பாடசாலைச் சமூகத்திற்கு பெரும்பணியை ஆற்றி கல்விப் பயணத்திலிருந்து ஓய்வுபெற்று மணிவிழாக் காணும் இவர், நீண்ட உடல் உள ஆன்ம பலத்துடன் வாழவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி வேண்டுகின்றேன்.

திரு.கி. கமலராஜன்
வலயக்கல்வி பணிப்பாளர்
கிளிநொச்சி தெற்கு வலயம்
கிளிநொச்சி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டக்கல்வி பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



காலத்தால் அழியாதது கல்விச்செல்வம். அதனை ஆன்மீகப் பணியோடு இணைத்து எதிர்கால பிரஜைகளுக்கு கற்றுக்கொடுக்கும் உன்னதப் பணியில் வாஞ்சையோடு ஈடுபட்டவர் சிந்தாத்துரை றோஜ் அனற்றா அவர்கள். அவரின் "அறுபதுகளில் அனற்றா" என்கின்ற மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். எதிர்கால மாணவ சமூகத்தை உருவாக்கும் பணியில் தன்னைக் கரைத்து மிகவும் பொறுப்புடன் கிளி/வலைப்பாடு றோ.க.த.க பாடசாலையில் கத்தோலிக்கப் பாட ஆசிரியராகவும், வழிகாட்டல் ஆலோசனைக்குப் பொறுப்பாகவும், இடைநிலை வகுதி தலைவராகவும் செயற்பட்டு மாணவர்களதும், ஆசிரியர்களதும் மனங்களை வென்றவர்.

For the dawn of each poet each philosopher and King begins with a teacher and the wisdom they bring என்ற Kevin William hauf அவர்களின் வரிகளுக்கு அமைவாக மாணவர்களை உருவாக்குவதற்காக தனது 28 வருட வாழ்வினை அர்ப்பணித்து, பாடசாலைப் பணியில் இருந்து ஓய்வுபெறுகின்ற அருட்சகோதரி அவர்களை மனதார வாழ்த்துவதோடு, அவரின் எதிர்காலம் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்க வேண்டுகின்றேன்.

**திரு.நா.கணேஸ்வரநாதன்**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்**
**பூநகரி கோட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



கிளி/வலைப்பாடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியர் அருட்சகோதரி அனற்றா அவர்களின் '60களில் அனற்றா' என்கின்ற மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

A good teacher is like a candle, it consumes itself to light the way for others என்கின்ற வசனத்திற்கு ஏற்ப எமது மாணவர்களையும், இளையோரையும் உருவாக்குவதற்கும் தனது பணியை ஆற்றியவர். மாணவர்களின் கல்விப் பயணத்தோடு மட்டுமல்லாது குடும்பங்களின் வாழ்வுக்காய் அமைதியாக அல்லும் பகலும் உழைத்தவர். ஆழமாக மாணவ சமூகத்தை நேசித்த பெருந்தகை. சக ஆசிரியர்களுடனும் தனது ஆழமான அன்பினால் இறுக்கமான உறவுப் பிணைப்பினை ஏற்படுத்தியவர். கற்றல் கற்பித்தல் பயணத்தின் முடிவு புனித அன்னம்மாள் அரவணைப்பின் மகிமையில் அகப்பட்டுக் கொண்டமை அருட்சகோதரி அனற்றா அவர்களுக்கு கிடைத்த செல்வம் என நான் கருதுகின்றேன். இவரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய, எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி வேண்டுகிறேன்.

**திரு.ஆ.உதயணன்**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்**
**பூநகரிக்கோட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



கிளி/வலைப்பாடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் ஆசிரியர் அருட்சகேதரி அனற்றா சிந்தாத்துரை றோஜ் அவர்களின் '60களில் அனற்றா' என்கின்ற மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

பண்பாடு, ஆளுமைவிருத்தி போன்ற இன்னோரன்ன பண்புகளை அவர்களில் வளர்த்து சமூகத்திற்கு ஒப்படைக்கின்ற பணியினை நெடுந்தீவு, வலைப்பாடு, மட்டக்களப்பு மீண்டும் வலைப்பாடு என ஆசிரியர் சேவையிலும் ஆன்மீகப் பணியிலும் தன்னைக் கரைத்து இன்று அறுபதாவது அகவையில் கால் பதிக்கின்ற அருட் சகோதரியை மனதார வாழ்த்துகின்றேன்.

காலத்தின் கரங்கள் கழுத்தினை நெரிக்க, கலைத்திட்டங்கள் கைபேசியில் தொலைந்து போக, மானுடப் பண்பின் பண்பு இன்றி, மனிதன் எப்படியும் வாழலாம் என எண்ணும் இளையோரை இறை ஒளியிலும், நிறை அறிவிலும் வழிநடத்தி வையகம் உய்த்திட தம் வாழ்வினை அர்ப்பணித்து, அறுபதாவது அகவை காணும் அருட்சகோதரியை இச்சமூகம் நன்றியோடு நினைவு கூருகின்றது.

A teacher is a compass that activate the magnets of curiosity, knowledge in the people என்பதனை நிறைவேற்ற தம் வாழ்வின் 28 ஆண்டுகளை அர்ப்பணித்த அருட்சகோதரி அவர்களை வாழ்த்தி, தொடரும் ஓய்வுக் காலத்தில் இறைபணியில் துடிப்புடன் எங்கும் பணியாற்றிட இறைஞ்சுகின்றேன் இறைவனை...

**திரு. சு. தர்மரத்தினம்**
**முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர்**
**பூநகரிக்கோட்டம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் வாழ்த்துச் செய்தி



**'எமது பாடசாலையில் இரண்டு காலகட்டங்களில் மாணவர்களுக்கு ஒழுக்கநெறிகளையும், கத்தோலிக்கப் பாடத்தினையும் சிறப்பாகக் கற்பித்தும் ஆன்மீக வழியிலும் மாணவர்களை வழிநடத்தினார்'.**

அருட்சகோதரி அனற்றா அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இவர் நமது பாடசாலையில் கற்பித்த காலங்களில் 'நிறைகுடம் தளம்பாது' என்பதற்கு இணங்க ஒப்படைக்கப்படுகின்ற எந்தவொரு வேலையையும், மிகவும் அமைதியாகவும், வினைத்திறன் வாய்ந்த வகையிலும் செய்து முடிப்பதில் இவருக்கு நிகர் இவரே ஆவார்.

மாணவர்களுடனும், ஆசிரியர்களுடனும் மிகவும் அன்பாகப் பழகுகின்ற ஒருவராக தமது பணியினை சிறப்பாக ஆற்றினார். எமது பாடசாலையில் மாணவர்களின் பிரச்சினைகளுக்கெல்லாம் வழிகாட்டலும் ஆலோசனையும் வழங்குபவராக சிறப்பாகச் செயற்பட்டார். இக்கட்டான பல நேரங்களில் சகோதரியை அணுகுகின்ற பொழுது நிறைந்த அனுபவம், சிறந்த ஆழமான கருத்தினால் வழிநடத்துகின்ற ஆற்றல் இறைவன் இவருக்குக் கொடுத்த கொடையாகும்.

பாடசாலைப் பணியில் இருந்து ஓய்வுபெற்றாலும் செல்லுமிடமெல்லாம் அளப்பரிய ஆன்மீகப் பணியினையும், ஆலோசனைப் பணியினையும் தொடர்ந்து செய்வதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருளினை இவர் மேல் பொழிந்திட வேண்டும் என்று இறைஞ்சுகின்றேன். மேலும், இவர் மிகவும் வாஞ்சையோடு கஷ்டமான, அதிகஷ்டமான பிரதேசங்களைத் தெரிவு செய்து பணியினை ஆற்றி வந்துள்ளமை தெரிகின்றது. இது மக்களை மிகவும் அன்பாக நேசித்தமையின் வெளிப்பாடாகும். இவர் தனது ஆழமான அறிவு நிறைந்த கருத்துக்களால் எமது பாடசாலையில் பெரும் பங்காற்றியுள்ளார். இவற்றிற்காக நன்றி கூறுவதோடு ஓய்வின் காலம் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A teacher's purpose is not to create students in his own image but to develop students who can create their own image என்பதற்கிணங்க, ஒவ்வொரு மாணவரையும் சரியாக இனங்கண்டு அவர்களது ஆற்றல்களை வளர்த் தெடுப்பதில் ஆர்வம் கொண்டவர். பாடசாலையின் எந்தவொரு நிகழ்விலும், சகஆசிரியர்களையும் ஈடுபட வைத்துக்கொண்டு இறைவனுக்காகவே பணியை ஆற்றுகின்றேன் என்று எப்பணியையும் தாமாகவே எடுத்துக் கொள்பவர்.

நான் பாடசாலையில் இறுக்கமான சூழலை எதிர்கொண்ட சூழல்களில், தனது இறைநம்பிக்கை மிக்க வார்த்தைகளால் வலிமை தந்தவர். கற்பித்தல் பணியில் பாடசாலையில் இருந்து ஓய்வு பெற்றாலும், பணித்தளங்களில் இறையாசியை எல்லோரும் அனுபவித்து விட வழிகாட்டுபவராக திகழ்வதற்கு தேவன் துணைபுரிய வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

**திரு.மரியநாயகம் மரியராசா (SLPS-III)**
**(B,COM,HNDE,PGDE,M.Ed,Dip IN Counseling,LL.B,)**
**அதிபர்,**
**கிளி/வலைப்பாடு றோ.க.த.க.பாடசாலை**
**வலைப்பாடு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உப அதிபரின் வாழ்த்துரை



மணிவிழாக் காணும் எமது மதிப்பிற்குரிய அருட்சகோதரி அனற்றா சிந்தாத்துரை றோஜ் அவர்கள் தனது கடமையை, பணிவாழ்வை எமது வித்தியாலயத்தில், எமது கிராமத்தில் இரு காலகட்டங்களில் ஆற்றியுள்ளார். முதலாவது கால கட்டம் யாழ்ப்பாண மாவட்ட மக்கள் இடம்பெயர்ந்து வன்னிப்பகுதிகளில் காடுகளிலும், வீதியோரங்களிலும், கடற்கரையோரங்களிலும் தமது வாழ்விடங்களை அமைத்து நெருக்கடியான வாழ்க்கை முறைகளில், போராட்ட யுகத்தில் வாழ்ந்த காலகட்டமாகும்.

இக்காலகட்டத்தில் தான் எமது கிராமத்திலும் தனது பணிவாழ்வை மக்களுக்கும் மாணவர்களுக்கும் ஆற்றினார். இரண்டாவது காலகட்டம் யுத்தத்தின் பின்னரான மீள் குடியேற்ற காலகட்டதத்தில் அவரது சேவை எம் கிராமத்திற்கு 2016இல் கிடைக்கப் பெற்றது. இவ்விரு காலகட்டங்களிலும் எம் கிராமத்தின் மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் கல்வியுடன், ஒழுக்கம், வழிகாட்டல் ஆலோசனை போன்றவற்றை வழங்கினார். பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். அமைதியான குணமுடையவர். ஏனைய ஆசிரியர்களுக்கும் முன்னுதாரணமாகச் செயற்பட்டவர்.

ஒவ்வொருவருடைய இன்பதுன்பங்களிலும் கலந்து ஆற்றுப்படுத்தினார். மணிவிழா நாயகியின் சேவை தொடர்ந்து நீண்ட காலம் சிறக்கவும், உடல் உள ஆரோக்கியத்துடன் பல்லாண்டு வாழவும் உளம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து, ஓய்வுக் காலத்தில் நிறைமகிழ்வோடும், துறவற அர்ப்பணத்தில் இறையாசீரோடும் நடைபயில இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**திரு.திருமதி கி. மதுரநாயகம்**
**உபஅதிபர்,**
**கிளி/வலைப்பாடு றோ.க.த.க பாடசாலை**
**வலைப்பாடு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருட்பணி லியான்ஸ் அன்ரனிதாஸ் அடிகளாரின் ஆசிச்செய்தி



மன்னார், பள்ளிமுனையில் பிறந்து இறைவனின் அழைப்புப் பெற்று, திருக்குடும்ப சபையில் இணைந்து மகிழ்வுடனும், அர்ப்பணிப்புடனும் கல்விப்பணியிலும், பங்குப்பணியிலும் தன்னை முழுமையாகக் கையளித்து இன்று கல்விப்பணியில் ஒய்வுபெறும் எம் பாசமிகு அருட்சகோதரி அனற்றாவுக்கு மணிவிழா வாழ்த்துச் சொல்லுவதில் நான் பெரும் மகிழ்வு அடைகின்றேன்.

நான் வலைப்பாட்டுப் பங்கில் பணியாற்ற வந்தபின் அருட்சகோதரி அறிமுகமானார். அவருடன் பணியாற்றிய அனுபவத்தில் அருட்சகோதரி இறைவனில் ஆழமான விசுவாசம் கொண்டவராகவும், அர்ப்பணம் நிறைந்த வராகவும் தேவையில் உள்ளவர்களைத் தேடிச் சென்று பணியாற்றுவதில் ஆர்வம் உள்ளவர்.

பாடசாலையில் இவர் நல்வழிகாட்டியாக இருந்து மாணவர்களுக்கு மட்டு மல்ல ஆசிரியர்களுக்கும் ஒரு வழிகாட்டியாகப் பணியாற்றினார். ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட அக்கறையுடன், தேவைப்படும் நேரங்களில் மாணவர்களின் வீடுகளைத் தரிசித்து மாணவர்களையும், பெற்றோரையும் ஊக்குவித்த பெருமை இவரைச்சேரும். உதவிகள் தேவைப்படும் மாணவர்களை அடையாளம் கண்டு உதவிகள் பெற்றுக்கொடுத்து மாணவர்கள் கல்வியில் இடையூறுகளின்றி கல்வியில் முன்னேற உறுதுணையாகப் பணியாற்றினார்.

பங்கில் மறையாசிரியர்கள், பீடப்பணியாளர்கள், புனித வின்சன் டீ பவுல் பக்திச் சபைக்கும் வழிகாட்டியாகவும், நோயாளர்களுக்கு நற்கருணை வழங்குதல், வீடுகள் தரிசித்தல் போன்ற பணிகளில் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றார். இவரது அன்பான, இரக்கமான உறவாடல் பங்கு மக்களை ஊக்கப்படுத்தி இறையுறவில் வாழ வளர ஊக்கப்படுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது திருக்குடும்பக் கன்னியர் இல்லம், (வேரவில்) வலைப்பாடு றோ.க.த.க பாடசாலைக்கு 1½ KM தூரத்தில் அமைந்துள்ளது. வாகனவசதிகள் இல்லாத காலங்களில் நடையாக பாடசாலை வந்து பணியாற்றினார். மழைக் காலங்களில் வேரவில் பாதை நிறைந்த தண்ணீர் தேங்கி நிற்கும். அதற்குள் கால்பதித்து நடந்து பாடசாலைக்கும், பங்கு ஆலயத்திற்கும் மகிழ்வுடன் வருகை தந்து பணியாற்றியதை கண்கூடாகக் கண்டறிந்த விடயமாக இருக்கின்றது.

அருட்சகோதரி கல்விப் பணியில் ஓய்வுபெற்றாலும் இவரது அர்ப்பணவாழ்வு என்றும் மனமகிழ்வுடனும், நிறைவுடனும் தொடர இறைவனை வேண்டுகிறேன். அருட்சகோதரியுடன் இணைந்து பணியாற்றியதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இவரது பணிவு, இறைவிசுவாசம் என்றும் இவரை ஆசீர்வதிக்கவும், நல் உடல், உள நலனுடன் வாழ இறையாசீர் நிறையாசீர் வேண்டி வாழத்தி செபித்து நிற்கின்றேன்.

**அருட்பணி லியான்ஸ் அன்ரனிதாஸ்**
**பங்குத் தந்தை,**
**புனித அன்னம்மாள் ஆலயம்**
**வலைப்பாடு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் திருக்குடும்ப மாகாண முதல்வரின் வாழ்த்துச் செய்தி



ஆசிரியப் பணியின் தொடக்கமும் ஓய்வும் ஒரே பாடசாலையாக அமையும் அனுபவம் மிகவும் அரிதான தாகும். இந்த அனுபவம் எமது அருட்சகோதரி அனற்றாவிற்கு வலைப்பாடு புனித ஆனாள் றோமன் கத்தோலிக் தமிழ் கலவன் பாடசாலையில் கிடைத துள்ளதை நினைத்து பூரிப்படைகின்றேன். எமது சகோதரி அனற்றா 1995ம் ஆண்டிலே முதன் முறையாக ஆசிரியப் பணியைப் பொறுப்பேற்று வலைப்பாட்டிலேயே மிகுந்த அர்ப்பணிப்புடன் பணி செய்தவர் ஆவார். ஆசிரியராகி கல்விப் பணியோடு மட்டுமல்லாது பங்கிலே அனைத்து தேவைகளிலும் விழிப்புடனும், பொறுப்புடனும், வாஞ்சையுடனும் பணி செய்தார். மீண்டும் 2009ம் ஆண்டிலே பாடசாலை இடமாற்றம் பெற்று மட்டக்களப்பிலே பணிசெய்தார்.

இறுதிப் போர்க்காலத்தில் இவரது பாடசாலை மாணவிகள் அதிகமானோர் பள்ளிப்படிப்பை இடைநிறுத்திய போது மிகுந்த வேதனை அடைந்தார். எப்படியாவது க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர் கள் உயர்தரம் படித்து முன்னேற வேண்டும் என்ற அயராத ஆர்வமும், தீராத தாகமும் கொண்டவராக பல முயற்சிகள் செய்தார். வலைப்பாட்டுக் கிராமத்தில் மிகவும் அதிகமான குடும்பங்களை அறிந்திருக்கின்றார். அவர்களது ஆன்மீக ஆழத்தையும், வரட்சியையும் நன்கு தெரிந்திருக்கின்றார். மிகவும் அமைதியான சுபாவமும், பொறுமையும், சாந்தமான பேச்சும், எப்போதும் நல்லதையே நினைக்கின்ற மனமும் கொண்ட எம் அருட் சகோதரியை பாடசாலையின் ஆசிரியராகவும், பங்கின் பணியாளராகவும், எம் கன்னியர் மடத்திற்கு நல்ல தலைவியாகவும் அனுப்பி வைத்த இறைவன் மிகவும் நல்லவரே. சிறுசிறு குழப்பங்கள் கூட இச்சமூகத்தில் வாழும் ஒவ்வொருவரையும், கல்வியையும், ஒழுக்கச் செயற்பாடுகளையும் பாதிக்கும் என்பதை நன்கு தெரிந்தவராக, வீடுகளைச் சந்தித்து குடும்பம் குடும்பங்களாக ஆன்மீகப் பணியாற்றியுள்ளார். கல்விப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியில் மிகுந்த சாதனைகளை விட, சோதனைகளையும், வேதனைகளையுமே சுமந்து வந்துள்ளார். அதாவது க.பொ.த சாதாரணதரப் பரீட்சை வரை பிள்ளைகளை கொண்டு செல்வது, கல்லில் நார் உரிக்கும் செயற்பாடாக பல தடவைகளில் உணர்ந்துள்ளார். இதில் சித்தியடைந்த மாணவர்கள் உயர்தரம் தொடராமல் படிப்பை விடும்போது மிகுந்த கவலையடைந்துள்ளார். கிளிப்பிள்ளைக்கு எடுத்துச் சொல்வது போல் சொல்லி, கெஞ்சிக் கூத்தாடியும் பயனற்ற நிலைகளைக் கண்டு கண்ணீர் வடித்த சந்தர்ப்பங்களும் உண்டு. துவிச்சக்கரவண்டி, உந்துருளியில் பயணம் செய்வது விருப்பமற்றதாகவும், இயலாமை இருந்தாலும் மாணவச் செல்வங்கள், வலைப்பாட்டுச் சமூகத்தின் எதிர்கால நலன்கள் அனைத்தையும் ஏற்றுக் கொண்ட உன்னத ஆசிரியராகப் பணியாற்றினார்.

இவரது அன்பான அரவணைப்பு, எந்த மதத்தவரையும் மதிக்கின்ற பண்பு, எளிமையான தோற்றம், மன்னிக்கும் மனப்பாங்கு, சாதாரண வாழ்வு அனைத்துமே 'இறைவன் மாத்திரம்' என்ற தாரக மந்திரமே அவரது வாழ்விற்கு அழகு சேர்க்கின்ற ஆபரணங்களாக அமைந்துள்ளமை சிறப்பே. "உன் அருள் எனக்குப் போதும்" என்ற இறைவார்த்தையை ஏற்று முழுமன மகிழ்வுடனும், நம்பிக்கையுடனும் கல்விப்பணியை மிகவும் அற்புதமாக செய்து முடித்த எம் அருட்சகோதரி நீண்ட ஆயுளுடன் மகிழ்வுடன், நலமாக வாழ வாழ்த்துகின்றேன். எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான். எனவே அருட்சகோதரியே எண்ணையும் எழுத்தையும் கண்ணென மதிக்கின்ற ஒவ்வொரு மாணவரின் உள்ளத்திலும், இறவாமல் உயர்ந்து நிற்பீர்கள் என நம்புகின்றேன். அதிபர், ஆசிரியர்களுடன் நீங்கள் வாழ்ந்த வாழ்வும், ஒத்துழைப்பும் பாடசாலையின் ஆசிரியர், மாணவர்களுக்கு ஒளி கொடுக்கும் தீபமாக அமைதி ஏற்றி ஒளிர்வித்துள்ளீர்கள். தொடர்ந்தும் உம்பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

**அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்**

**மாகாணத்தலைவி,**

**யாழ் மாகாண இல்லம்**

**யாழ்ப்பாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஓர் நீண்ட பயணம் ஆசிரியர் பணியிலே போற்றுதற்குரிய பெருமைமிகு கல்விச் சேவையினை சீருடனும் சிறப்புடனும் ஆற்றிப் பணியிலிருந்து ஓய்வுபெறும் அன்புக்குரிய அருட்சகோதரி அனற்றா சிந்தாத்துரை றோஜ் அவர்களின் பணியினை நினைத்து பாராட்டு வதிலும், வாழ்த்துவதிலும் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்நாளில் அவரது மகத்தான சேவையினை எண்ணி பாடசாலைச் சமூகத்தோடு இணைந்து என் நன்றிகளையும் பகிர்ந்து நிற்கின்றேன்.

முழு மனித உருவாக்கத்திற்கு அறிவு, ஒழுக்கம், ஆன்மீகம் அடிப்படையான இந்நிலைகளில் மாணவர் சமூகத்தை வளர்த்தெடுக்க, கட்டியெழுப்பத் தன்னலம் பாராது தம்மைக் கரைப்பவர்கள் ஆசிரியர்கள். மாணவர்கள் தம் நாளைய மனித குலத்தை ஒளிர வைக்க வேண்டியவர்கள் என்பதை தாமே உணர்ந்து இன்று தம்மை தீயாக உருக்கி ஒளி கொடுப்பவர்கள் ஆசிரியர்கள். இத்தகையதொரு மேலான உன்னதமான ஆசிரியப் பணியை பல்வேறு பாடசாலைகளில் மேற்கொண்டு இறுதியாக கடந்த ஐந்து வருடங்களாக கிளி/வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலையிலும் அரும்பணியாற்றி, ஆசிரியப்பணியில் இருந்து ஓய்வுபெறும் அருட்சகோதரி அவர்களின் கல்விப் பணிகளை, அவரது பண்புகளை பட்டியலாக்குவது இலகுவான விடயம் அல்ல, காரணம் மாணவர்களின் நிலைகண்டு அவர்கள் மீது அவருக்கு இருந்த பற்று, பாசம், பணியின் ஆழம் என்பவை வெறும் வார்த்தைகளால் விபரித்து விட முடியாதவை.

மெல்லக் கற்கும் மாணவர்களிடம் அவர் காட்டும் அக்கறையும், கரிசனையும் மற்றும் ஏனைய மாணவர்களிடம் இருக்கும் திறமைகளை, ஆற்றல்களை வெளிக்கொணர அவர் காட்டும் வேகமும் விடாமுயற்சியும் ஓர் ஆசிரியராக அவரின் தனித்துவத்தைக் காட்டுகின்றது. மாணவர்கள் போட்டிப் பரீட்சைகளில் ஏனைய பாடவிதானப் போட்டிகளில் பாடசாலைக்குப் பெற்றுத் தந்த சாதனைகளில் இருந்து அவர் பணியும் மேன்மையும் விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்கப் பாட ஆசிரியராகப் பணியாற்றிய அருட்சகோதரி ஓர் துறவியாக தன்னுடைய அழைப்பு எது? என்பதை தன்னுடைய கற்பித்தலின் ஊடாக இனங்கண்டு, சமய அறிவைக் கற்றுக் கொடுப்பதோடு மட்டும் தன்னை மட்டுப்படுத்திக் கொள்ளாது, மாணவர்களுடைய ஒழுக்கத்திலும் ஆன்மீகத்திலும் மிகவும் ஆர்வத்தோடு பங்கெடுத்தார்.

அருட்சகோதரி ஆசிரியராகப் பணியாற்ற வந்த காலப்பகுதியிலேதான் 2018 இல் நானும் வலைப்பாட்டுப் பங்குத் தந்தையாக அங்கு பொறுப்பேற்று இருந்தேன். என்னுடைய பணிக் காலத்தில் அருட்சகோதரி மாணவர்களை நன்கு அறிந்து அவர்களுடைய உருவாக்கத்தில் குறிப்பாக, பாடசாலை, ஆலயம், வீடு என்ற அவர்களின் வாழ்வியல் வட்டத்திற்குள்ளே தானும் நுழைந்து பயணித்துப் பணியாற்றியதை நான் நன்கு கண்டு கொண்டேன்.

யாரோடும் எதனோடும் சமரசம் செய்யாமல் தம் மனச்சான்றுக்கு மட்டும் செவிசாய்த்து எவ்வித பாரபட்சமும் இன்றி, எல்லோரையும் சமமாக மதித்து சவால்களைத் துணிவோடு ஏற்றுப் பணியாற்றியுள்ளார். எனவே ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வுபெறும் அருட்சகோதரியின் பணி வாழ்வுக்காக இறைவனுக்கு நன்றி கூறுவதோடு மேலும் அவரது துறவுப் பணி சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**அருட்பணி அலோய் அருண் நேசகுமார்**
**முன்னாள் பங்குத்தந்தை**
**புனித அன்னம்மாள் ஆலயம்**
**வலைப்பாடு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற உறுப்பினரின் வாழ்த்துச் செய்தி

**சிவஞானம் சிறீதரன் பா.உ.**
M.Ed.,B.A,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
இல.882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
:-021 228 0024, 021 222 1595,
:-021 228 0024, 021 222 1595,
:-077 691 3244
:-shritharanmp@gmail.com
:-www.shritharan.com

පාර්ලිමේන්තුව
**பாராளுமன்றம்**
**PARLIAMENT**

**SIVAGNANAM SHRITHARAN M.P**
M.Ed.,B.A,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District,
No.882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
:-021 228 0024, 021 222 1595,
:-021 228 0024, 021 222 1595,
:-077 691 3244
:-shritharanmp@gmail.com
:-www.shritharan.com

**2023.07.14.**

**மணிவிழா சிறக்க மனம் நிறை வாழ்த்துகள்.**

திருத்தன்மையும், இறைதன்மையும் நிறைந்திருக்கக்கூடிய அர்ப்பண வாழ்வில் ஓர் அருட்சகோதரியாக இருந்துகொண்டு, ஆசிரியப் பணியையும் ஏற்று, அவ்விரு அறப்பணிகளுக்காகவே தன்வாழ்வைக் கரைத்து, ஆசிரியப் பணி நிறைவில் இன்று மணிவிழாக் காணும் அருட்சகோதரி அனற்றா சிந்தாத்துரை றோஜ் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை நான் பெரும்பேறாகவே கருதுகிறேன்.

மன்னார் மாவட்டத்தைத் தன் பூர்வீக மண்ணாகக் கொண்டிருந்தபோதும், பணிநிலைகளின் பொருட்டு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, மன்னார் மாவட்டங்களிலுள்ள பல பாடசாலைகளில் கத்தோலிக்கபாட ஆசிரியராக கடமையாற்றிய அருட்சகோதரி அவர்கள், முழுமையாக மூன்று தசாப்த காலம் ஆசிரியப் பணிக்காகத் தன்னை அர்ப்பணம் செய்திருக்கிறார்.

ஆசிரியத் தொழிலின் பல்வேறுபட்ட பரிமாணங்களில் படிப்படியான வளர்ச்சி கண்டு, அறுபது வயதிலும் நிமிர்ந்த நடை, நேர் கொண்ட பார்வை, நிதானமான போக்கு, நேர்மையான சிந்தனை என்பவற்றோடு அறம்சார் வழியில் மாணவரை அறிவூட்டும் பாங்கும் ஒருங்கேசேர்ந்து உலாவரும் இவரை பெண் ஆளுமைகளுக்கான ஓர் அடையாளமாக அடிக்கோடிட்டுக் காட்டமுடியும். கல்விப்புலத்தில் மிக நீண்ட காலங்கள் கருத்தொன்றி சேவையாற்றி மூன்று தசாப்த காலமாக கல்வியில், கலைகளில், ஒழுக்கத்தில் உயர்ந்த ஒருபெரும் மாணவ சமுதாயத்தை உருவாக்கிய பெருமைக்குரிய இவர், வாழும் காலமெல்லாம் இவ்வையம் வாழ்த்தும் வண்ணம் பணிபுரிந்திருப்பது போற்றுதற்குரியது.

சமயம் சார்ந்து மாணவர்களை நெறிப்படுத்துவது மட்டுமே தனது வாழ்க்கைப் போக்கு என்றல்லாமல், தான் கற்ற கல்வியினூடும், பெற்ற வாய்ப்புகளினூடும், தன்னைச் சார்ந்த மாணவ சமுதாயத்துக்கு எதைத் தந்துவிட முடியுமோ, அந்த வரம்புகளையெல்லாம் கடந்து நிற்கும் அவரது உயர் பணிகளால் என்றும் போற்றுதற்குரியவராய் அருட்சகோதரி அவர்கள் தனக்கான தனித்துவ அடையாளத்தை உருவாக்கியிருக்கிறார்.

கடந்த ஐந்து வருடகாலமாக கிளி/வலைப்பாடு றோ.க.த.க பாடசாலையின் கத்தோலிக்க பாட ஆசிரியராகவும், பாடசாலையின் ஆலோசனையும் வழிகாட்டலுக்குமான குழுவின் தலைவராகவும் இருந்து நிறைவான பணியாற்றி இன்று தன் அறுபதாவது அகவையில் பணி ஓய்வு பெறும் அருட்சகோதரி அனற்றா அவர்களின் மணிவிழா நிகழ்வும், மலர் வெளியீடும் சிறப்புற வாழ்த்தும் அதேவேளை, ஆசீர்வதிக்கப்பட்ட அர்ப்பண வாழ்வில் அவர் தம் வாழ்நாள் முழுமைக்கும் நிறைவும், பேறும் பெற்றவராக வாழ்ந்திருக்க தேவனின் திருப்பாதங்களைத் தொழுதுநிற்கிறேன்.

இங்ஙனம்,
மக்கள் பணியிலுள்ள,

சிவஞானம் சிறீதரன்
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.

சி.சிறீதரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்,
இல : 882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



மன்னார் பள்ளிமுனை மண் தந்த மாண்புறு திருக்குடும்பத் துறவியும், ஆசிரியையுமான அருட்சகோதரி அனற்றா அவர்களுக்கு மணிவிழா வாழ்த்து வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

கிளி/ வலைப்பாடு றோ.க.த.க பாடசாலை மண்ணில் 1995.10.01 ஆசிரியராகக் கால்பதித்து 1998 வரை மகிழ்வுடனும், தியாகத் துடனும் கல்விப்பணி, பங்குப்பணி ஆற்றிச் சென்று மீண்டும் இம்மண்ணில் 2018.05.04 கால்பதித்து இன்று வரை பல இடர்கள், கஷ்டங்கள், சவால்களுக்கு மத்தியில் பணியாற்றி ஓய்வு பெறுகின்றார்.

அருட் சகோதரியுடன் வாழ்ந்த அனுபவத்தில் நான் அடிக்கடி கூறிக் கொள்வது அரசாங்கத்துக்கு துரோகம் செய்யாதவர் அந்த வகையில் பாடசாலைக்கு தவறாது செல்பவராகவும், விடுமுறை எடுப்பதில் காலம் தாழ்த்துபவராகவும், அர்ப்பணிப்புடனும், வாஞ்சையுடனும் போக்குவரத்து வசதிகளற்ற வேளையில் ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் நடந்து துவிச்சக்கர வண்டியில் பயணித்து, மழைக் காலங்களில் பாதையில் உள்ள கிடங்குகள் பள்ளங்கள் சேறுகளில் மிதித்தவராக கல்விப் பணியாற்றியதை நினைத்து தலைவணங்கிப் பாராட்டி நிற்கின்றேன்.

அன்பான அரவணைப்பு ஆசிரியருக்கு உரிய தோற்றப்பாட்டுடன் தனது கற்பித்தல் பணியை தியாகத்துடன் நிறைவேற்றினார். மாணவ மாணவிகளில் தனிப்பட்ட அக்கறையுடன் அவர்களின் வீடுகள் தரிசித்து, அவர்களின் உடல் உழைப்பிலும் அக்கறை கொண்டு, தேவையில் உள்ள மாணவ மாணவிகளை அடையாளம் கண்டு நிறைவுசெய்ய பல உதவிகளை நாடி, அவர்களில் முழு அக்கறையுடன் பணியாற்றினார். வீடுகள் தரிசிப்பில் எதிர்ப்புகள் வந்த போதும் துணிவுடன் எதிர்கொண்டு தவறுகளை சுட்டிக்காட்டி நீதி உண்மையும் பாதையில் நடக்க வழி காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்சகோதரியை மழலைகளையும், சிறார்களையும் மிகவும் நேசித்தார்கள். வீராப்புடன் பழகினார்கள். உறவாடினார்கள். கற்றுக் கொண்டார்கள். அவ்வாறான மாணவ மாணவிகள் பலர் இன்று பல்வேறு ஆளுமைகளைப் பெற்று மிளிர்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அருட் சகோதரி வன்மையால் எதையும் சாதிக்கக் கூடாது என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டு. அன்பால் எதையும் சாதிக்கலாம் என்ற உள்ளம் கொண்டவர். எம் சகோதரியின் பணி சிறக்கவும் இறைவன் என்றும் இவருடன் இருந்து தொடரும் பணிவாழ்விலும் துணை நிற்கவும் வேண்டி என் இதயபூர்வமான வாழ்த்துக்களும் ஆசிர்களும் உரித்தாகுக!

பாராட்டுகின்றேன் உம் பணிதனை பாராட்டட்டும் பாருன்னை...

**அருட் சகோதரி அனிட்டா**
**திருக்குடும்பக்கன்னியர் இல்லம்**
**வேரவில்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



அளவு கடந்த கருணை மிகுந்த இறைவன் அருளால் அகவை 60இல் அழகாக கால்பதிக்கும் உங்கள் அழகான வாழ்க்கைக்கு பாதை அமைத்து, துறவறக் காலமும் கண்ணின் மணியை இமைக்காப்பது போல் உங்களை காத்துவந்த இறைவா! உமது கருணைக்கு என் சிரம் தாழ்த்தி நன்றி கோடி கூறி நிற்கின்றேன்.

திருக்குடும்ப அருட்சகோதரியாக அவரது திராட்சை தோட்டத்தில் அழகுமிக்க இறைவன் பாதத்தை, உமது கண்ணியம்மிக்க அர்ப்பணிப்புடனும், கவனத்துடனும் கடந்து வந்தீர். குருகுலம், அன்பின் அருட் சகோதர சகோதரிகள், பங்குமக்கள், உறவுகள் அனைவரும் உம்மைச் சூழ, இவ் அகவை அறுபதிலும் இருபது போல் சுறுசுறுப்பாக இருக்கும் உங்கள் இறைவனின் பணிசிறக்க எல்லாம் வல்ல இறைவனை இடைவிடாது வேண்டி நிற்கின்றேன்.

**என்றும் அன்புடனும்**
**இறையாசீருடனும்**
**அருட்பணி ஜோசப் செல்வன் பிகிறாடோ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை



மாதா, பிதா, குரு, தெய்வம் என்கின்ற உன்னதமான ஆசிரியப் பணியை ஆர்வத்தோடும் தியாக உணர்வோடும் திறம்பட ஆற்றி இவ்வருடம் ஓய்வு பெறுகின்ற மதிப்புக்குரிய அருட்சகோதரி அனற்றா அவர்களுக்கு வாழ்த்துக் கூறுவதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இறைவனின் அழைப்பை முழுமனத்தோடு ஏற்று, அதற்கு இன்று வரை பிரமாணிக்கமாக இருப்பதோடு மாத்திரமன்றி, தான் ஏற்ற ஆசிரியப் பணியை ஆர்வத்தோடும், அர்ப்பணிப்போடும் பல ஆண்டுகளாக திறம்பட ஆற்றி இவ்வாண்டு ஓய்வு பெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆசிரியப் பணியைத் தொடங்கிய ஆரம்பத்திலிருந்து இன்று வரை அருட்சகோதரி அவர்கள் இலங்கையில் வடக்கு, கிழக்கின் பல பாடசாலைகளில் குறிப்பாக, பின் தங்கிய அதிகஷ்டப் பிரதேசங்களில் பல துன்பங்கள், யுத்தம், போக்குவரத்து தடைகள், இடப்பெயர்வுகள் மத்தியிலும் தனது பணியினை சிறப்பாக ஆற்றியிருக்கின்றார். ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வு பெற்றாலும், மக்களுக்கான அவரது பணி சிறந்த முறையில் தொடர, மனமார வாழ்த்துவதோடு அவருக்கு வேண்டிய இறை ஆசிரியர் நிறைவாகக் கிடைக்கவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**அன்புடன்**

**அருட்பணி மெனோ பஸ்ரி ஜயந்த (அ.ம.தி)**

**அவுஸ்திரேலியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகவை 60 இல் தடம்பதிக்கும் அருட்சகோதரி அனற்றாவுக்கு வாழ்த்துச் செய்தி



தாயின் கருதனிலே இறைதயவில் உருவாகி
இறைவன்அருளால் இப்புவிதனிலே உதித்து
அன்னாள் பெயர் தாங்கி வளர்ந்திடட சகோதரியே

இயற்கை எழில் கொஞ்சும் பள்ளிமுனையூரினிலே
லூசியாள் பெயர் சுமந்த கல்விக் கூடமதில்
பழுதில்லாக் கல்வியை பாங்குடனே கற்று
பருவத்தே பயிர்செய்ய புறப்பட்ட எம் சகோதரியே

பியன்வெனு நோஆய் திருவடி தொடரும்
திருக்குடும்பக் கன்னியர் சபை வழிச்சென்று
திருமகன் யேசுவின் அழைப்பினை ஏற்று
இறை திருவடி அர்ப்பணமாகிய எம் சகோதரியே

இறைபணியிலொன்றான கண்திறக்கும் கல்விப் பணியினை
இதய ஆவலுடன் இளம் வயதில் ஏற்றுக் கொண்டு
இதயசுத்தியுடனும் மிகுந்த கண்ணியத்துடனும்
குறைச் சொல்லுக்கு இடமின்றி கொடுத்தீர் உம் பணிதனை

ஓடி ஓடி கற்பித்தீர் ஓரிடமா? ஈரிடமா?
ஓய்வுபெறும் இத் தருணம் வரை
தமிழீழக் கரையோரம் எடுத்தியம்பும்
தன்னலம் பாராத உம் பணிதனை
ஆண்டவர் தந்த அறுபது ஆண்டுகளும்
அழகுறவே பல பணிசெய்து
ஓய்வு பெறுகின்ற எம் சகோதரியே உம்மை
"முன்னேற இடமுண்டு" என முதலாம் பிள்ளைக்கு எழுதுவது போல்
ஓயாத இறைபணிக்காய் உவந்தும்மை வாழ்த்தி
மீண்டுமொரு தோணியில் வழியனுப்பி வைக்கின்றோம்
தொடரட்டும் உங்கள் இறைபணி

அருட்பணி சூ. லக்கோன்ஸ் பிகிறாடோ
(மறைக்கோட்ட முதல்வர் - மடு)
பங்குத்தந்தை
விடத்தல் தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளரின் உள்ளத்தில் இருந்து



நிலத்தின் முதல் துகளே!
நீரின் முதல் துளியே!
தீயின் முதல் பொறியியே!
காற்றின் முதல் அணுவே!
வானின் முதல் ஒளியே!
மணிவிழா நாயகியை வாயார வாழ்த்துங்கள்

முகிற்குடையில் கீழுறங்கும் சோலை அது வலைநகர்.
புல்லில் முத்தமிடும் பனிமுத்து மாலை அது வலைநகர்.
புள் உறங்கும் பெருந்தரவை உந்தனுக்கு அழகு. ஆநிரை முதல் மாநிரைவரை படுத்துறங்கும் எழில் நகர்.

முணங்கு முதல் முந்தல் வரை குடாவோடு பட்டி தொட்டு அழகிற்கே அழகு சேர்க்கும் எம் கிராமத்தின் கலங்கரை விளக்கமாய் நிமிர்ந்து நிற்கும் எமது பாடசாலையில் ஒளி விளக்காய் பற்றி எரிந்து தேடி வரும் அத்தனை பேருக்கும் வழிகாட்டியாய் இன்று மணிவிழாக் காணும் அருட்சகோதரியை எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றேன்.

அன்னையின் சேவைதனை ஒரு சொல்லில் வடித்து விட முடியாது ஓராயிரம் சேவைகளை இன்முகத்துடன் எமக்கு வழங்கியே நின்றீர். எமது பள்ளியிலே உமது சேவையின் தொடக்கமும் முடிவும் கண்டு மனமகிழ்வில் பூரிப்படைகின்றேன்.

"என் பாதங்களுக்கு கீழே பூக்கள் இல்லை.
மொய்த்துக் கிடந்தவை முட்கள் எனினும்
இரத்தம் துடைத்து நடந்து வந்தேன்.
என்னை தடவிச் சென்றது
தெற்கே குளித்து வந்த தென்றல் அல்ல.
நுரையீரல்களை காபன் தாள்களாக்கி
கறுக்க வைக்கும் கந்தகக் காற்று இருந்தும்
சுடச்சுட சுவாசித்து வந்தேன்."

என்பது போல கஷ்டங்கள் மத்தியிலும் வீறு நடை போட்டுச் செல்லும் இடமெல்லாம் தங்கள் சேவை தொடர மனதார வாழ்த்தி நிற்கின்றேன்.

**திரு.நியூட்டன் பென்சமின்**
**செயலாளர்**
**பாடசாலை அபிவிருத்தி சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுய விபரம்



| | |
|---|---|
| பெயர் | : அருட்சகோதரி அனற்றா சிந்தாத்துரை றோச் |
| தந்தை பெயர் | : அந்தோனி சிந்தாத்துரை றோச் |
| தாய் பெயர் | : சிந்தாத்துரை பிரான்சிஸ்கா றோச் |
| பிறந்த திகதி | : 1963.07.26 |
| பிறந்த இடம் | : பள்ளிமுனை, மன்னார் |
| முதல் அர்ப்பணம் | : 1989.02.02 |
| நித்திய அர்ப்பணம் | : 1995.10.03 |

**சேவை செய்த இடங்கள்**

1. யா/நெடுந்தீவு மத்திய பெண்கள் பாடசாலை (15.09.92 – 30.09.95)
2. கிளி/ வலைப்பாடு றோ. த. க பாடசாலை (01.10.95 – 22.03.98)
3. பலாலி ஆசிரிய கலாசாலை (23.03.98 -17.01.2000)
4. ம/ புனித லூசியா மகாவித்தியாலயம் (17.01.2000 – 25.02.2000)
5. யா/ சென் ஜேம்ஸ் மகளீர் பாடசாலை (01.03.2000 – 25.02.2009)
6. ம/கருவேப்பங்கேணி விபுலானந்தா வித்தியாலயம் (06.02.2009 –03.05.2018)
7. கிளி/ வலைப்பாடு றோ.க.த.க பாடசாலை (04.05.2018 – 26.07.2023)

**கல்வி கற்ற பாடசாலை**

1. ஆரம்பக் கல்வி - மன் / புனித லுசியா மகாவித்தியாலயம்.
2. இடைநிலைக்கல்வி – மன் / புனித லுசியா மகாவித்தியாலயம்.
3. உயரதரம் - மன்/ புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுப்பணியில்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைபணியில் தன்னைக் கரைத்த ஆசிரியத் துறவி

அருட்சகோதரி அனற்றா சிந்தாத்துரை றோச் திருக்குடும்பத் துறவற சபையைச் சார்ந்த ஒரு பணியார்வம் உள்ள நல்ல துறவி. இவர் வேத சாட்சிகளின் இரத்தம் தோய்ந்த மன்னார் மண்ணில் பள்ளிமுனை என்ற கத்தோலிக்க கிராமத்தில் 1963 ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 26 ஆம் தேதி பிறந்தார். இவர் தனது குடும்பத்தில் நான்காவது பிள்ளையாவார். இவர் வளர்ந்து வரும் பராயத்தில் தமது கிறிஸ்தவ மண்ணின் வாசனைக்கு ஏற்ப கல்வியிலும், ஒழுக்கத்திலும், ஆன்மிகத்திலும் முனைப்பு காட்டியவராக இருந்தார் இவர் தனது ஆரம்பக்கல்வியை புனித லூசியா றோ.க.த.க வித்தியாலயத்தில் (தற்போது மகா வித்தியாலயம் என பெயர் கொண்டது) கற்றார். தனது உயர்தரக் கல்வியை மன்/புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையிலும் கற்றுக் கொண்டார். இவருடைய குடும்பத்தினர் கோவில் வேலைகளில் மிகவும் நெருக்கமாக இருந்தபடியால், இவரும் அனைத்து ஆலயம் சம்பந்தப்பட்ட பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். சிறப்பாக, ஆலய வழிபாட்டுக்குழு, பாடகர் குழாம், புனித லூசியா இளை யோர் மன்றம், மரியாயின் சேனை போன்ற செயற்பாடுகளில் பங்கெடுத்தார்.

ஆற்றலும், ஆர்வமும், இளமைத்துடிப்பும் கொண்ட இவரை நன்கு அவதானித்த திருக்குடும்ப அருட்சகோதரிகள் தம்முடைய சபைக்கு இணைத்துக் கொள்வதற்கு ஆர்வம் கொண்டார்கள். அவரும் திருக்குடும்ப துறவற சபையினரின் மேன்மையான பணிகளினா், அவர்களின் வாழ்க்கை முறைகளினாலும் கவரப்பட்டார். தானும் அவர்களைப்போல இறைபணி செய்து வாழ வேண்டும் என்று தனது விருப்பத்தை அவர்களிடம் கூறி, தனது உயர்தரக் கல்வியை மன்/புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையில் நிறைவு செய்து 1998 ஆம் ஆண்டு திருக்குடும்பத் துறவறசபையில் postulant ஆக இணைந்து கொண்டு தொடர்ச்சியாக இளவாலையில் நவசன்னியாச வாழ்வை முடித்து, அங்கே 1989.02.02இல் முதல் அர்ப்பணத்தை இறைவனுக்குக் கொடுத்துத் தனது துறவற அர்ப்பண வாழ்வை ஆரம்பித்தார். துறவற சபையில் இருந்துகொண்டு 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதற்கேற்ப, தானும் படித்துக் கொண்டு அவற்றின் உயர் நிலைகளைப் பெற்றுக் கொண்டு, தனது துறவற பணிகளை மீண்டும் விரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திக் கொள்வதற்காகக், கற்பித்தல் என்னும் பணியாற்றி ஆசிரியப் பணியில் 1992ஆம் ஆண்டு நெடுந்தீவில் உள்ள யா/நெடுந்தீவு மத்திய பெண்கள் பாடசாலையில் தொடங்கி கிளி/வலைப்பாடு றோ.க.த.க பாடசாலை யா/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை, மட்/கருவேப்பங்கேணி விபுலானந்தா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் கற்பித்தலில் ஈடுபட்டார். மீண்டும் இரண்டாவது முறையாக, 2018 ஆம் ஆண்டிலிருந்து கிளி/வலைப்பாடு றோ.க.த.க பாடசாலையில் இன்று வரை பணிபுரிந்து வருகின்றார். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக, வலைப்பாட்டில் இருந்து பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு செல்ல முடியாது. கப்பல் பயணத்திற்காக தான் ஆரம்பக்கல்வி பெற்ற பள்ளிமுனை புனித லூசியா மகா வித்தியாலயத்தில் ஓரிரு மாதங்கள் கல்வி கற்பிக்க வாய்ப்பு பெற்றார். இது ஒரு பெரிய பேறாகவே அவருடைய வாழ்க்கையில் இருந்தது. இதற்குக் கடவுளுக்கு நன்றி கூறி மகிழ்ந்தவர். இவர் பணிபுரிந்த இடங்களில் பாடசாலைகளில் தம் பணியை பொறுத்தவரையில் மிகவும் பொறுப்பாகவும், நேர்மையாகவும், அர்ப்பணிப்போடும் செய்து வந்தார். சிறப்பாக மாணவ மாணவிகளின் எதிர்கால வாழ்வை நோக்கி அவர்களை ஊக்கப்படுத்துவதில் தன்னை முழுதும் கரைத்தவர். பணிக்குச் சென்ற இடங்களிலும், பாடசாலைகளிலும் மக்களோடும், ஆசிரியர்களோடும், அதிபர்களோடும் உரையாடுவதிலும், உறவாடுவதிலும் ஒரு நல்ல ஆசிரியராகவும், நல்லதோர் துறவியாகவும் இருந்து தனக்குக் கொடுக்கப்பட்ட பணியை செவ்வனே செய்து வந்தார். கிட்டத்தட்ட 31 ஆண்டுகள் ஆசிரியப் பணியில் தன்னை முற்றாக கரைத்து பணி செய்து இருக்கின்றார். இந்த ஆண்டு (2023) அருட்சகோதரி அனற்றா சிந்தாத்துரை றோஜ் அவர்கள் (திருக்குடும்பச்சபை) தனது ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வுபெறுகின்றார். சகிப்புத்தன்மையும் உள்ளார்ந்த அர்ப்பணமும் மற்றவர்களை தட்டிக் கொடுக்கின்ற மனப்பான்மையும் கொண்ட இந்த நல்ல உள்ளம் படைத்த அருட்சகோதரிக்கு எல்லாம் வல்ல இறைவன் இகபர நன்மைகளால் நிறைத்து தொடர்ந்தும் இனிவரும் காலத்திலும் பாதுகாக்க வேண்டும் என்று இறையாசீர் வேண்டி நிற்கின்றேன்.

**அன்புடன்**

**அருட்பணி செபமாலை பெரேரா**

**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "அழைத்தவனை அனுபவித்த அருட் சகோதரி அனற்றா"

அருட் சகோதரி அனற்றா சிந்தாதுரை றோச் நெய்தல் நிலச் சிறப்பு வாய்ந்த பள்ளிமுனைக் கிராமத்தில் 1963ஆம் ஆண்டு ஆடித் திங்கள் 26 ஆம் நாள் றோச் குடும்பத்தில் நான்காவது மகளாக பிறந்தார். தனது கல்வியை பள்ளிமுனை புனித லூசியா பாடசாலையிலும், மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையிலும் கற்றுத் தேர்ந்தார். இக்காலத்தில் இறை அழைத்தலின் காற்று இவரை சூழ்ந்துகொள்ள இறைவனின் அழைப்பிற்கு தன்னை கையளித்து திருக்குடும்ப கன்னியர் சபையில் தன்னை இணைத்துக் கொண்டார். ஆரம்ப உருவாக்கத்தின் பின் தனது முதல் அர்ப்பணத்தை 02.02.1989 இலும், நித்திய அர்ப்பனத்தை 03.10.1995 இலும் செய்து கொண்டார்.

இவர் 1992.09.15 இல் ஆசிரியர் நியமனத்தை யாழ்/நெடுந்தீவு மகளிர் பாடசாலையில் பெற்றுக் கொண்டாலும், நாட்டுப் பிரச்சினை காரணமாக தனது முதல் சம்பளத்தை வலைப்பாட்டுப் பாடசாலையில் பெற்றுக் கொண்டார்.

புனித அன்னம்மாளின் (மரியாளின் தாயாருடைய) பெயரைத் தாங்கிய இச் சகோதரி பல சவால்களை சந்தித்ததை காணக்கூடியதாக இருக்கின்றது. இச் சகோதரி நான் வலைப்பாட்டுப் பங்குத் தந்தையாக இருந்த காலப்பகுதியில் வலைப்பாட்டில் பணியாற்றி வந்த வேளையில் இடப்பெயர்வு ஏற்பட்டு, மக்கள் இடம் பெயர்ந்து வன்னி பிரதேசத்தை நிரப்பிய பொழுது, வலைப்பாடு, வேரவில் போன்ற பகுதிகள் மக்களால் நிரம்பி வழிந்தன. பொருளாதாரக் கஷ்டங்கள் மக்களிடையே ஏற்பட்ட பிரச்சனைகள் அத்தோடு பல வகையான நோய்களும் குறிப்பாக பலவகைக் காய்ச்சல்களும் பரவி மக்களை பயமுறுத்தின. இந்த வேளையில்தான் அருட்சகோதரி அனற்றாவுடன் இருந்த அருட்சகோதரிகளையும் பாராட்ட வேண்டும். அவர்கள் தங்களால் இயன்ற பணிகளை முழுமூச்சுடன் செய்தார்கள்.

இக்காலகட்டத்தில் பல சூழ்நிலைகள் எங்களைப் பயமுறுத்தி வந்த வேளையில் ஒருநாள் அருட்சகோதரி அனற்றா எம்மை பயமுறுத்தியே விட்டார். ஒழித்துப் பிடித்து விளையாட்டில் அல்ல, மாறாக அவவிற்கு ஏற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்ச்சல் தொடர்கதையாக இருந்தது. மரணத்தோடு போராடி மறுவாழ்வை பெற்றார் எனத்தான் கூறவேண்டும். ஏனெனில், அவவுக்கு ஏற்பட்ட காய்ச்சல் மூளை மலேரியா எனக் கண்டுபிடிக்கப்பட்டது. பலர் செபித்தார்கள் இறுதியில் உயிர்பெற்று எழுந்து தனது பணியை முழுமூச்சோடு செய்யத் தொடங்கினார்.

சகோதரி மீண்டும் வளம் பெறுவதற்கு அவவிடம் இருந்த அர்ப்பணிப்பு, நிறைந்த வாழ்வு, செபவாழ்வு, நீடிய பொறுமை, தாழ்ச்சி, எல்லோரையும் அன்பு செய்து தோழமை உணர்வுடன் பழகும் மனநிலை காரணம் எனக் கண்டு கொண்டேன். எல்லோருக்கும் இருக்கின்ற தவிர்க்க முடியாத ஓர் பலவீனம் கோபம் கொள்வது ஆனால் சகோதரியும் ஒரு சிறிய புன்முறுவலினால் வெற்றி கொள்வார். இல்லையேல் அமைதியாக அந்த இடத்தை விட்டு விலகி விடுவார். நான் பணியாற்றிய காலத்தில் பல சந்தர்ப்பங்களில் பங்கு மக்களிடையே எழுந்த பெரும் பிரச்சினைகளை அவர்களோடு பேசிச் சமரசம் செய்து தீர்த்து வைத்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

பல கஷ்டமான இடங்களிலே தனது பணியை விஸ்தரித்துக் கொண்டு மன உறுதியோடு பாடசாலைப் பணியோடு பங்குப்பணி, சமூகப்பணி போன்ற வற்றிலும் கடுமையாக உழைத்ததை காணக்கூடியதாக இருக்கின்றது. சகோதரி கல்விப்பணியில் ஓய்வு பெறுகின்றாரேயன்றி அவரின் ஏனைய பணிகளுக்கு ஓய்வு இல்லை. எனவே, தொடரும் பணியில் உடல் உள ஆன்மீக நலத்தோடு பணி தொடர செபித்து வாழ்த்தி நிற்கின்றேன்.

**இறை அடியான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 வருட வெள்ளிவிழா நிறைவில்
மகிழ்ந்திருக்கும் யூபிலி நாயகர்கள்







காலங்கள் தந்த
வாழ்வின் வரலாற்றுச் சுவடுகள்
கல்விப் பணிதனில்
அர்த்தம் கொடுத்திட
பல்வேறு நிறப்பூக்களும்
நறுமணம் கமழ்ந்து
மாலைகள் ஆக்கிட
அர்ப்பணத்தின் மகிழ்வில் மிளிர்ந்து
தீரமுடன் நடை பயிலும்
வெள்ளிவிழாக் காணும் ஆசான்கள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசான்களுக்கு எம் நன்றிகள்

எம்மை விட்டு விலகிய ஆசான்களே!
நன்றியால் உம்மை நினைக்கின்றோம்

வளமுள்ள சிறிய கிராமத்தினை
அன்பு செய்து அன்பிற்கினிய கல்விதனை
ஆசையுடன் எம் செல்வங்களுக்கு
ஊட்டினீரே

அன்பிற்கு மேல் அன்பினைப் பொழிந்து
ஆனந்தமுடனே எம் சமூகத்தில் அளப்பரிய சேவைதனை
ஆற்றிய ஆசான்களை
நன்றியோடு நினைக்கின்றோம்.

தேடக் கிடைக்காத செல்வங்களாய்
எம் ஊரினை தேடிவந்து
ஆர்வமுடனே அனைவரையும்
கவர்ந்து அன்புப் பணிதனை
ஆற்றிய உங்களுக்கு நன்றிகள்
கூறிப் புவிதனில் உம்மைப்
போற்றுகின்றோம்
நீடூழி காலம் வாழ்க
உம்பணி வளர்க

**திரு திருமதி கிறிஸ்ரீன் பிரியா குடும்பம்**
**வலைப்பாடு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசான் யார்?

அன்பின் முத்து அணைக்கும் அன்னை
என்னை அகிலம் விளங்க ஆக்குபவர்

அழகிய சிற்பியாய் சமூகத்தில்
நான் வாழச் செதுக்குவார் என்னை
அழகிய புதுப்படைப்பாய் மாற்றுவார் என்னை

என் அறிவுக் கண்ணைத் திறப்பவர்
ஆவலுடன் எல்லாவற்றையும்
அள்ளி அள்ளித் தருபவர்

தன்னலம் நோக்காதவர்
என்னைத் வழிப்படுத்துபவர்
உருட்டி மிரட்டி என்னை
உயர்வடையச் செய்பவர்

காலம் சென்றாலும் காலத்தால் அழியாதவர்
மனமதிலே வாழ்பவர்
சிறுவர்களுக்கான பயிற்சிக் களமாய்
ஏழ்மையின் விருத்திப் பட்டறையாய் பயணிக்கும்
உங்கள் ஆசிரியம் வாழ்க!

**கி.அன்ரனி கிவின்சன்**
**தரம் - 4**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியப்பணியில் மாணவர்களுடன்...

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணி ஓய்வு

நீங்கள் இறைவனுடன் இணைந்து வாழ
பாடசாலைச் சமூகம் தரும் ஓய்வு இது
காலத்தை வெல்வீர்
காவியம் படைப்பீர்

உங்களுக்கான நேரம் இது
பிடித்த வாழ்க்கையை ரசித்து வாழ்ந்திட
புதிய உலகம் கம்பளம் விரித்து காத்திருக்கின்றது
தொடங்குங்கள் புது வாழ்வை

சரித்திரம் படைத்த மாணவர்கள் எல்லாம்
உங்களை நினைக்க மறந்தது இல்லை
மாணவர்கள் பெற்ற வெற்றிகள் எல்லாம்
உங்கள் நெற்றி வியர்வைகள் விஸ்வரூபங்கள்.

பேனா பிடித்த கைகள் எல்லாம்
வீணாய்ப் போனதாய் சரித்திரம் இல்லை
விதிகளில் இருந்து விடுதலை பெற்றீர்
இனி மிரட்டிய அதிகாரமும் விரட்டிய கடிகாரமும்
உங்கள் வசம் தான்

உங்களின் கை பிடித்து எழுதக் கற்றார்கள்
இன்று கையெழுத்துப் போடும் அதிகாரம் பெற்றார்கள்
அர்ப்பணிப்பு உணர்வோடு அறப்பணியைச் செய்தீர்கள்
அறப்பணியில் நாங்கள் சிறக்க அடிக்கடி வாருங்கள்

உங்கள் பாதம் பதித்துச் செல்லுங்கள்
எங்கள் உயர்வு கண்டு மகிழுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களை சுமந்த நாற்காலியோ ஏங்கி நிற்கின்றது
வயதுக்கு மட்டும் ஓய்வு அளித்து

உங்கள் கருணைக்காக காத்திருக்கின்றது
உங்கள் வாசம் சுமந்த பாடசாலை சமூகம்
ஆயிரம் மாணவர்களின் அன்னையும் நீரே
ஆசிரியப் பணியின் அர்த்தமும் நீரே

வகுப்பறையை கருவறையாக்கி கலைவாணி நீரே
அன்பால் வெல்லும் அற்புதக் கலையால்
மாணவர் உள்ளம் கவர்ந்த அன்னையும் நீரே
இரக்க குணத்தால் இறைவனை வென்ற

இன்முகம் கொண்ட இறையவள் நீரே
எண்ணும் எழுத்தும் எண்ணத்தில் விதைத்தீர்
ஏணிப்படியாய் ஏற்றம் தந்தீர்
பணி ஓய்வு என்பது பொருந்த சொல்லே

ஆசானுக்கு என்றும் ஓய்வே இல்லை
அன்னைக்கும் மேலான அரவணைப்புத் தந்தீர்
அறியாமை போக்கும் அருந்தொண்டு செய்தீர்
உயரிய பணியை உயிர்ப்புடன் செய்தீர்
ஊக்கம் தந்து உயரத்தைக் கண்டீர்

**கி.டெஸ்மன்**
**தரம் :- 08**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தம் நிறை அர்ப்பண வாழ்வு

"நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன் நீங்கள் கனிதரவும் நீங்கள் தரும்கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன்". (யோவான்15:16)

திருமுழுக்கு வழியாக கிறிஸ்தவ விசுவாச வாழ்வு வாழ நாம் அழைக்கப் பட்டுள்ளோம். கிறிஸ்து இயேசுவால் விசுவாசம் கொள்ளும் ஒவ்வொருவரும் புனித வாழ்வு வாழ வேண்டும் என்பதே இறைத்தந்தையின் முதன்மையான அழைப்பு. இறை தந்தையின் பிள்ளைகளாக, கிறிஸ்துவின் சகோதர சகோதரிகளாக, தூய ஆவியின் ஆலயங்களாக, இவ்வுலகில் பிரதிபலிக்கும் கருவிகளாக நாம் வாழ்வதன் மூலமே அழைத்தல் வாழ்விற்கு அர்த்தம் கொடுக்க முடிகின்றது. நாசரேத்தின் திருக்குடும்பத்தை முன்வைத்து அக்குழுமத்தோடு எமது குடும்பத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

திருக்குடும்பத்தில் நிலவிய மறைவான புண்ணியங்கள், இறைவன் மாத்திரமே எனும் மனநிலை, செபம், பகிர்தல், அன்பு, உறவு, ஒற்றுமை ஆகிய நற்பண்புகள் எமது குடும்பத்திலும் பிரதிபலிக்கின்றதாயின் நாமும் நமது சமுதாயத்தில் அர்த்தமுள்ள இறை குடும்பமாக வாழ்கின்றோம் என்பதில் ஐயமில்லை.

இயேசு மரி சூசை நாசரேத்தில் சாதாரண குடும்பமாக வாழ்ந்தாலும், மறைந்து அறியப்படாத குடும்பமாக இருந்தாலும் தமது கிராமத்தில் நாளாந்த வாழ்வில் மக்களோடு பின்னிப்பிணைந்து இறை சித்தத்தைத் தேடுவதிலும் இறைவனை நாடுவதிலும் ஒருமித்திருந்தனர்.

குடும்பவாழ்வு, செபம், வேலை போன்ற நாளாந்த செயற்பாடுகளில் இறைவனின் பிரசன்னத்தையும் பராமரிப்பையும் உணர்ந்து அனுபவித்தனர். இன்றைய காலப்போக்கில் எமது சமுதாயத்தின் மத்தியில் எமது சூழலை, எமது குடும்பங்களை, எமது வேலைத்தளங்களை, எமது சமூகத்தை, எமது கிராமத்தின் திருஅவையைக் கட்டி எழுப்புவதில் எவ்வளவுக்கு ஆர்வமும். அக்கறையும், கரிசனையும் கொண்டவர்களாக எமது அழைப்பு அர்ப்பண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வு காணப்படுகின்றது என்பதை இந்த நேரத்திலே சிந்தித்துச் செயலாற்ற எம்மை அழைத்து நிற்கின்றது.

எனவே குடும்பவாழ்வை ஒரு இல்லத் திருஅவையாக வாழ்வதன் மூலம் திருஅவையை இறை குடும்பமாகக் கட்டி எழுப்புவதில் நாம் பங்களிப்பு செய்கின்றோம். இதனால் எமது அர்ப்பண வாழ்விற்கும் அழைத்தலுக்கும் அர்த்தம் கொடுத்து வாழ்கின்றோம்.

வாழ்வில் வரும் இன்பங்களிலும், துன்பங்களிலும் இறைபராமரிப்பில் நம்பிக்கை வைத்து, இறை பிரசன்னத்தை அடையாளம் கண்டு வாழ்வதன் மூலம் எமது அர்ப்பண வாழ்விற்கு அர்த்தம் கொடுக்கின்றோம். நமது வாழ்நாள் முழுவதும் இயேசு மரி சூசையின் பாதச் சுவடுகளைப் பின்பற்றி அர்த்தம் நிறை அர்ப்பண வாழ்வை வாழ்வோம்.

**டொறக்சன் விமலதாஸ்**

**வலைப்பாடு**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிழ்வின் ஆரம்பம்

"உடல் ஒன்றே உறுப்புக்கள் பல உடலின் உறுப்புகள் பல வாயினும் உடல் ஒன்றாய் இருப்பதுபோல் கிறிஸ்தவும் ஒன்றாய் இருக்கின்றார்''

திருக்குடும்பப் பொதுநிலை துணை அங்கத்தவர்களாக எமது குறிப்பிட்ட அழைத்தலை மகிழ்வாக வாழ அழைக்கப்படுகின்றோம். ஒரே ஆவியின் அழைப்பைப்பெற்று, ஊட்டம் பெற்று ஒரே நோக்குடையவராக குடும்ப வாழ்வை வாழ அழைக்கப்பட்டுள்ளோம்.

கிறிஸ்துவை உடலாகக் கொண்டுவாழும் எமது குடும்பத்தில் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் உடல் உறுப்புக்களாக இருக்கின்றோம். இன்றைய உலகில் எத்தனையோ குடும்பங்கள் அமைதியின்றி, நிம்மதியின்றி வாழ்ந்து கொண்டிருப்பதை அன்றாடம் காண்கின்றோம். காரணம் குடும்பத்தில் ஒற்றுமை இல்லை, அன்பு உறவு இல்லை பெற்றோர் பெரியோரை மதிப்பதில்லை, கீழ்படிவு இல்லை குறிப்பாக இறைவார்த்தை வாழ்வது இல்லை. இவற்றினால் கிறிஸ்துவுக்கும் அங்கு இடமில்லை. ஆகவே பல இடர்களை தாங்கிய குடும்பங்களாக இவை காணப்படுகின்றன. கிறிஸ்தவர்கள் ஆகிய நாம் கிறிஸ்துவை தலையாகக் கொண்ட விசுவாசிகள். அவரின் நம்பிக்கையுடன் அவரின் வார்த்தையை வாழ்வாக்கி அவருடன் மகிழ்வோம். இன்பத்திலும் துன்பத்திலும் இறைவனைக் கண்டு மகிழ்வோம் எனது குடும்பம் மகிழ்ச்சியான குடும்பம். இறை தந்தைக்கு நன்றி.

எங்களுடைய இன்பம் துன்பம் கஷ்டம் கவலை கண்ணீர், ஒவ்வொரு வேலையும் இறைவன் எம்மோடு இருக்கின்றார். அனைத்தையும் அவர் பார்த்துக் கொண்டிருக்கின்றார். எமது மகிழ்வில் குறை இல்லை. "எல்லாம் யேசுவே எனக்கெல்லாம் இயேசுவே தொல்லைமிகு இவ்வுலகில் எனக்கெல்லாம் இயேசுவே" என்றெண்ணி ஒவ்வொரு குடும்பமும் மகிழ்வில் வாழ அழைக்கின்றேன்.

**வி. எழில்**

**வலைப்பாடு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா வாழ்த்துக்கள்

மன்னார் அன்னை தந்த
மணிவிழா நாயகியாம்
அருட் சகோதரி அனற்றா
ஆன்மீகத்தை ஆழமாக நேசித்து
ஆன்மீகப் பணியை தம்பணியாக்கி
ஆன்மீக நெறியை வளர்க்க
அயராது பணியாற்றி
அறியாமை மிக்க மாணவருக்கு
கல்வி ஞானத்தை புகட்டி
கத்தோலிக்க பாடம் மூலம்
நல் விழுமியத்தை ஊட்டி
மாண்புமிகு மாணவர்களை
மாநிலத்தில் உருவாக்கிய அருட் சகோதரிக்கு...
எனது மணிவிழா வாழ்த்துக்கள்.

வெள்ளை ஆடை அணிந்து
அருட் சகோதரி என்னும் நாமம் தாங்கி
சமாதான புறா போல் பல இடங்களில் பறந்து சென்று
சமாதானம் என்னும் நற்பண்பை
மக்கள் மத்தியில் ஏற்படுத்தி
யாதும் ஊரே யாவரும் கேளிர்
புறநானூற்றுப் பாடல் அடியை
தன் மனத்தே ஆழமாகப் பதித்து
பிறர் நலம் பேணும் பண்பை
தன் விழுமியமாகக் கொண்டு
சமயப் பணியோடு சமூகப் பணியாற்றும்
அருட் சகோதரிக்கு... எனது மணிவிழா வாழ்த்துக்கள்.

அன்னையாகவும் சகோதரியாகவும்
அறிவுத்தேடல் மிக்கவருக்கு
அறிவை வழங்கும் நல் ஆசானாகவும்
அன்பாக பழகி பண்பாகப் பேசி
அனைவரையும் அன்பாக அரவணைத்து
ஆலோசனை பல வழங்கி
ஆற்றுப்படுத்தும் பண்புடைய
மணிவிழா நாயகியின் சேவைதனைப் பாராட்டி
வாழ்த்துக்களைக் கூறுகின்றேன்.

திரு.ச.ஜெசிந்தன்
ஆசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்களுடன் ஆசிரியராக...











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் நிறை அருட்சகோதரி

அருள் நிறையப் பெற்ற
அருட்சகோதரியாம் - ஆன்மீகம்
பொழியும் பேறு பெற்ற
ஆசானாய் - எம் மண்ணிலும்
உம் பேற்றைப் போதிக்க
வந்துதித்த வெண்ணிலாவே
உம் பணிக்கு எம்
முதல் வணக்கங்கள்

அன்புள்ளம் கொண்ட சகோதரியாக
ஆண்டவனின் அருள் வாங்கி – வந்த
சகோதரியே உம் சேவை
இம்மண்ணில் இன்னும்
வேண்டும் பலகாலம்
மன்னார் மண்ணின் மங்காத
ஒளிவிளக்காக இறைவன்
ஆசியுடன் இறைசேவை ஆற்றிட
வலைப்பாட்டு மண்ணிற்கு விரைந்தீரே
இருந்தாலும் சேவை செய்யும்
உள்ளங்களில் உயர்சேவை
உங்கள் ஆன்மீகச் சேவையே

ஆன்மீகச் சேவையுடன் ஆசிரியச்
சேவைதனை நிறைவாக
இணைத்துக் கொண்டீரே
ஒரு தடவையல்ல – மீண்டும்
மீண்டும் வலைப்பாட்டு
மண்ணிற்கு இறைவனால்
அனுப்பப்பட்டீரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம் சேவையை முழுமையாக
ஆற்றிட முயன்று நின்றீரே
மாணவர் மனதில் மங்காது
இடம் பெற்றீரே
இளைப்பாறும் காலத்தில்

இன்னும் இறைபணியை
நிறைவாக ஆற்றிட
இறைஉளம் ஆசீர்வதிக்கட்டும்
அருட்பணியிலும் ஆசிரியப் பணியிலும்
ஆண்டவனைக் காணுகின்றோம்
உங்கள் சேவை ஊரெங்கும்
உயர்ந்து சிறந்திட
உளமார வாழ்த்துகின்றேன்
இந்நாளில் வாழ்க பல்லாண்டு
வாழ்க பல்லாண்டு

**அ.அரிச்சந்திரன்**
**ஆரம்பப்பிரிவு பகுதித் தலைவர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனைய நிகழ்வுகள்...
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைநிலைக் கல்வியும் வேலையுலகும்

## அறிமுகம்

இலங்கையின் கல்வி வரலாற்றினை நோக்குகையில் காலத்திற்குக் காலம் பல்வேறு கல்விச் சீர்திருத்தங்கள் இடம்பெற்று வந்திருக்கின்றன. இவ்வாறு சீர்திருத்தங்கள் இடம்பெறுவதற்கு முக்கிய காரணங்களாக காணப்படுபவை இடைநிலைக் கல்விக்கும் வேலையுலகிற்குமிடையில் பொருத்தப் பாடின்மை அல்லது பாரிய இடைவெளி காணப்படுவதனையே குறிப்பிடலாம்.

எமது நாட்டில் வழங்கப்படுகின்ற இடைநிலைக் கல்வியானது மாணவர்கள் தொழில் துறைக்குள் பிரவேசிப்பதற்கு ஏற்றதிறன்களை போதியளவில் வழங்கவில்லை என்பதனை சுட்டிக்காட்டுகின்ற அதேவேளை கல்வியியல் கல்லூரிகளுக்கும், மருத்துவப் பீடங்களுக்கும், தாதியர் கற்கைநெறிகளுக்கும் செல்லுபவர்கள் மாத்திரமே அவற்றிற்குரிய வேலைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. ஏனைய மாணவர்கள் வேலை உலகுக்குள் தம்மை ஈடுபடுத்திக் கொள்வது பெரும் சவாலாகவே காணப்படுகின்றது.

அந்த வகையில் ஒவ்வொரு சீர்திருத்தங்களையும் தேசியக் கல்வி ஆணைக்குழு முன்வைக்கின்றபோது தொழில் கல்வியை முன்னிலைப்படுத்தி முன்வைப்புக்களை முன்மொழிந்தாலும், பாடசாலைகளில் இடைநிலைக் கல்வியை அமுல்படுத்துகையில் வினைத்திறனற்ற தன்மை, வளங்களின் பற்றாக்குறை, பொருத்தமற்ற சூழமைவுகள் என்பவற்றினால் தொடர்ந்தும் இடைநிலைக் கல்விக்கும் வேலையுலகிற்கும் இடையில் பொருத்தப்பாடு குறைவாகவே காணப்படுகின்றது. இன்று பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற ஆசிரியர்களும் தொழில்சார் திறன்களை மாணவர்களிடத்தே வளர்க்க வேண்டும் என்கின்ற அவாவினைக் கடந்து பரீட்சை மையமாகவும், உயர்புள்ளிகளை நோக்காகவும் கொண்டே கற்பித்தலில் ஈடுபடுகின்றார்கள். மேலும் உடல் உழைப்பு சார்ந்த தொழில் துறைகளுக்கு செல்லுவதற்கு அப்பால் உடை கசங்காத உத்தியோகத்தில் இருக்கவேண்டும் என்கின்ற மாணவர்களினதும், பெற்றோர்களினதும் எதிர்பார்க்கையினால் தொழில்திறன் சார்ந்த பாடநெறிகளை தொடர்வதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களும் சற்று குறைவான நாட்டம் கொண்டுள்ளதனையும் அவதானிக்க முடிகின்றது.

2018 ஆம் ஆண்டு மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின் பிரகாரம் தொழிலின்மை வீதம் 4.4% என குறிப்பிடப்பட்டுள்ளது. கல்வி வீதமானது 99.08% காணப்படுகின்றது. இவற்றை அவதானிக்கின்றபோது இவை இரண்டிற்குமான தொடர்பை விளங்கிக்கொள்ளமுடியும்.

## இடைநிலைக்கல்வி

இலங்கையின் பாடசாலைக் கட்டமைப்பில் இடைநிலைக்கல்வி என்பது

**கனிஸ்ட இடைநிலை**

**சிரேஸ்ட இடைநிலை**

என்ற அடிப்படையில் வகை II, 1C மற்றும் 1AB பாடசாலை மூலமாக வழங்கப்படுகின்றது. கனிஸ்ட இடைநிலைக் கல்வியில் போதிக்கப்படுகின்ற பாடங்களாக முதல்மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு, சமயம், அழகியல், சுகாதாரமும் உடற்கல்வியும், புவியியல், வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும், செயன்முறைத்தொழில்நுட்பம், இரண்டாம் மொழி என்பனவும் இதே போன்று சிரேஸ்ட இடைநிலைக்கல்வியில் தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு, சமயம், முதலாம் தொகுதிப் பாடங்கள், இரண்டாம் தொகுதிப்பாடங்கள், மூன்றாம் தொகுதிப் பாடங்கள் என்பனவும், உயர்தரத்தில், கலைத்துறைப்பாடங்கள், வணிகத்துறைப் பாடங்கள், பௌதிக விஞ்ஞானப்பாடங்கள், உயிரியல் விஞ்ஞானப்பாடங்கள், பௌதிகவியல் தொழில்நுட்பப்பாடங்கள், உயிரியல் என்பனவற்றினையும் குறிப்பிடலாம்.

உண்மையில் பாடத்திட்டங்களில் தொழில்கல்வியை இலக்காக கொண்டு பாடங்கள் உட்புகுத்தப்பட்டிருந்தாலும் அவற்றினை பாடசாலை களில் வினைத்திறனான முறையில் கற்பிப்பதற்கு போதுமான வளங்கள் காணப்படாமை, பொருத்தமான ஆசிரியர் வளங்கள் பாடசாலைக்கு கிடைக்கப்பெறாமை, அவற்றை உரிய முறையில் அமுல்படுத்தாமை போன்ற காரணங்களும் எதிர்பார்த்த தொழில்திறன்களும் மாணவர்களை சென்றடை வதிலிருந்து புறக்கணிக்கப்படுவதற்கு காரணமாகின்றது. அழகியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடங்களை பாடசாலைகளில் கற்பித்தாலும் அவற்றிற்கான வேலை வாய்ப்புக்கள் வெளியுலகில் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

இவ்வாறான பாடங்களை கற்பிப்பதன் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்ற திறன்கள் முழுமையாக அவர்களை சென்றடைவதில்லை. இதன்காரணமாக வேலையுலகு எதிர்பார்த்து நிற்கின்ற திறன்களை இடைநிலைக்கல்வியை முடித்து பாடசாலையைவிட்டு வெளியேறு கின்ற மாணவர்கள் கொண்டிருக்காமையினால் வேலையுலகிலிருந்து வெளிவீசப்படுகின்றார்கள்.

## தொழிற்கல்வி

வேலையுலகிற்கு தேவையான தொழில்கல்வியானது பாடசாலைக் கட்டமைப் பில் இடைநிலைக்கல்வியினூடாக மாணவர்களுக்கு வினைத்திறனாக வழங்கப்படவேண்டும். தொழில் கல்வி என்புது மனிதர்கள் சிறந்த தொழில் முறையை தெரிவு செய்வதற்கும் அவர் சார்ந்த தொழிலை திறம்பட மேற் கொள்ளும் பொருட்டும் விருத்தி செய்யப்படவேண்டிய திறன்களை வழங்குவதும் ஆகும்.

இன்றய காலப்பகுதியில் மரபு சார்ந்த தொழில்களுக்கு அப்பால் நவீன தொழில்துறையில் பல்வேறு வகையான புதிய தொழில்கள் தோற்றம் பெற்றிருக்கின்றன. அத்தொழில் துறைகளுக்குள் நுழைவதற்குரிய திறன்களை எமது மாணவர்களுக்கு இடைநிலைக்கல்வி வழங்கவில்லை என்பதே மிக முக்கியவிடயமாகும்.

இதனால் எமது நாட்டின் கல்வித்துறையும் வேலை உலகும் இருவேறு துருவங்களாக காணப்படுவதனை தொழில் தருநர்களும், கல்வியியலாளர் களும் தொடர்ச்சியாகவே சுட்டிக்காட்டி வருகின்றனர்.

இதற்கு இடைநிலைக்கல்வியில் வெறுமனே செயற்பாடுகள் அற்ற மனனம் செய்து ஒப்புவிக்கின்ற பரீட்சைமையகல்வி காணப்படுதலே முக்கியகாரணமாக அமைகின்றது. மேலும் சமூகத்தில் காணப்படுகின்ற தொழில் துறைக்கும் கல்விக்கும் இடையில் தொடர்பற்ற ஒவ்வாதநிலை இருப்பதனை அவதானிக்க முடிகின்றது. இதன்காரணமாக தொழில்துறைக்கும் கல்வித்துறைக்கும் முரண்பட்டநிலை நிலவுகின்ற தன்மை அதிகமாக உள்ளது. வேலையுலகிற்கு பொருத்தமான கல்வி வழங்கப்படவில்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது கல்விக்கு ஏற்ற வகையிலான தொழில்துறை எமது நாட்டில் இல்லையா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

## சமகால விடயங்கள்

வேலையுலகிற்குள் பிரவேசிக்கின்ற ஒவ்வொருவரும் சிறப்பான தொழில் திறன்களை கொண்டிரக்கவேண்டுமென தொழில் தருநர்கள் எதிர்பார்க்கின்றார் கள். அந்தவகையில் வேலையுலகானது பின்வரும் திறன்களை இன்றைய காலப்பகுதியில் வேண்டி நிற்கின்றது.

- ❖ தெளிவாகப் புரியும் விதத்தில் உரையாடும் திறன்
- ❖ ஆங்கில மொழித்திறன்
- ❖ ஆளுமைப்பண்பு
- ❖ அடிப்படைத்தொழில்நுட்ப அறிவு
- ❖ படைப்பாற்றல்
- ❖ புத்தாக்கத்திறன்
- ❖ பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் திறன்
- ❖ குழுக்கலந்துரையாடல்
- ❖ விமர்சனங்களை எதிர்கொள்ளுதல்
- ❖ தகவமைப்பு சிந்தனை
- ❖ இணைந்து செயற்படும்திறன்
- ❖ முன்னோக்குப் பாதையில் சிந்திப்பது

என்பனவாகும். இந்த திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள் கற்பதற்கு அல்லாமல் சிலவற்றை செய்வதற்கு கற்றுக்கொடுங்கள் என்ற ஜோண்டூஜி அவர்களின் கருத்தானது தொழில்கல்வி முறைமையின் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

எனவே எமது மாணவர்களுக்கு சிறந்த தொழிற்கல்வியை வழங்க வேண்டும். JAKE என்பவர் கூறுகையில் வர்த்தகம் அல்லது தொழில்சார் செயன்முறையில் ஒருவர் முன்னோக்கி செல்வதற்கு உதவும் பயிற்சியுடன் கூடியதும் முதன்நிலையானதுமான திறன்கள் தொழில்சார் திறன்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கின்றார். இவ்வாறான திறன்களை இடைநிலைக்கல்வியானது பொருத்த மாக வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டு காணப்படுகின்றது.

இவ்வாறான நிலை காணப்பட்டபோதிலும் தற்போது இலங்கை அரசாங்க மானது தொழிற்துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளதனை அவதானிக்க முடிகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியெய்தத் தவறுகின்ற மாணவர்களுக்கென தொழில்துறையாக பதின்மூன்று வருட உத்தரவாதப் படுத்தப்பட்ட பாடசாலைக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டு வெற்றிகரமாக அமுல்ப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது. இச்செயற்பாடும் தரம் 11 இல் சித்தியெய்தத் தவறிய மாணவர்களைக் கொண்டிருப்பதனால் எதிர்கால மாணவர்களும் தாம் கல்வி கற்காது விடினும் தமக்கு வேலைகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கல்வியை உதாசீனம் செய்வதற்கு வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

உலக வங்கியானது 2019 இல் எதிர்கால வேலை உலகிற்கான உலக அபிவிருத்தி அறிக்கையில் தொழிற்கல்வி மற்றும் பொதுக்கல்விக் கிடையிலான இணைவுத்தன்மை மாற்றமுறும் தொழில் நுட்பத்தின் அதீத செல்வாக்கைக் கொண்டுள்ள தொழில் சந்தைக்கு ஏற்ப ஒவ்வொருவரையும் ஏற்புடையவர்களாக மாற்றுவதில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. இக்கருத்தானது பொதுக்கல்வி முறையில் தொழில்சார் கல்வியின் இணைவின் அவசியத்தை எமக்கு வலியுறுத்துகின்றது.

## சாதகமான கருத்துக்கள்

1981 இல் முன்வைக்கப்பட்ட கல்வி சீர்திருத்த அறிக்கையான வெள்ளை அறிக்கையின் விளைவாகவே பாடசாலைக் கலைத் திட்டத்தில் வாழ்கைத் தேர்ச்சி என்ற பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட திறன்கள் பாடசாலைகளால் வெற்றிகரமாக மாணவர் களுக்கு வழங்கப்படவில்லை.

இதேபோன்று 2007 இல் செயல்முறை மற்றும் தொழில் நுட்பத் திறன்கள் (PTS) அறிமுகம் செய்யப்பட்டது. இதன்மூலம் தொழில்நுட்பக் கல்வியின் ஐந்து பரந்தவிடயங்கள் மாணவர்களுக்கு சென்றடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த வகையில் அடிப்படைத்தொழில்நுட்பம், உணவுத் தொழில்நுட்பம், ஆடைத்தொழில்நுட்பம், விவசாயத்தொழில்நுட்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் வியாபார செயற்பாடுகள் என்பனவாகும. இவ் ஐந்து பிரிவு களிலும் தகவல் கணினி தொழில்நுட்பம் உள்ளடக்கப்பட்டுள்ளதனை அவதானிக்க முடியும். இப்பாடத்தின் மூலமாக விசேடமாக மாணவர்களிடத்தில் பிரச்சினை தீர்க்கும் திறன்கள், தொடர்பாடல் திறன்கள், சிந்திக்கும் திறன்கள் விருத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் பாடசாலைக்கட்டமைப்பில் ஒன்பது தொழில்நுட்பப் பாடநெறிகள் தரம் 10, 11 களில் மூன்றாவது இடைப்பாடமாக அறிமுகப் படுத்தப்பட்டது. இவற்றிலிருந்து மாணவர்கள் ஒன்றைத் தெரிவு செய்து கொள்ளவேண்டும். அப்பாடங்களாக வடிவமைப்பு மற்றும் கட்டுமானத் தொழில்நுட்பவியல், வடிவமைப்பு மற்றும் இயந்திரவியல் தொழில்நுட்பவியல், வடிவமைப்பு மின்னியல் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பவியல், கலை மற்றும் கைவினை, விவசாயம் மற்றும் உணவுத்தொழில்நுட்பம், நீர்வாழ் உயிர்வள தொழில்நுட்பவியல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல், மனைப்பொருளியல், சுகாதாரமும் உடற்கல்வியும் என்பனவாகும். இதே போன்று 16/2006, 06/2013 என்ற சுற்றுநிருபங் களினூடாக தொழில் வழி காட்டல் சேவையானது ஆரம்பிக்கப்பட்டு எதிர்கால தொழிற்சந்தைக்கு ஏற்ற வகையில் மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் தொழில்க் கல்வியை தெரிவு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

## பாதகமான கருத்துக்கள்

மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் வேலை யுலகின் எதிர்பார்க்கைகள் நிறைவு செய்யப்படாமலேயே காணப்படுகின்றன. இதற்கான காரணங்களாக

- ❖ அறிமுகப்படுத்தப்பட்ட பாடங்கள் சில பொருத்தமற்றவையாக காணப்படுகின்றது. அதாவது எதிர்பார்த்த தொழில் திறன்களைக் குறைந்தளவிலேயே மாணவர்களுக்குக் கொடுக்கக் கூடியதாக இருக்கின்றது. எடுத்துக்காட்டாக, சுகாதாரமும் உடற்கல்விப் பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட தொழில்சார் திறன்களை மாணவர்களிடத்தில் குறைவாகவே ஏற்படுத்தியுள்ளது.
- ❖ வளங்களின் சமனற்ற பரம்பல் காணப்படுகின்றமையும் அதாவது கிராமப் பாடசாலைகளைக் காட்டிலும், நகரப் பாடசாலைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்கள் அளவுக்கதிகமாகக் காணப்படுவதனால் கிராமப்புற மாணவர்கள் போதிய தொழில் திறன்களை பெற்றுக்கொள்ள முடிவதில்லை.

- பாடசாலை ஆசிரிய நியமனங்களிலும் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றமை. தொழில்நுட்பக்கல்வியைக் கற்றால் அதற்கேற்ற தொழில் வாய்ப்பு இல்லாமை தொழிலைச் செய்வதற்கான வசதியில்லை, தொழில் தெரிவில் அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றமை.

- கல்வியின் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்ற உயர் தொழில்கள் மூலம் கிடைக்கின்ற வருமானம் சிறுகைத்தொழில்கள் மற்றும் விவசாயத்துறை மூலம் கிடைக்கின்ற வருமானங்களை விட குறைவாக இருப்பதனால் அவற்றை விரும்பாமை அதிகமாகவுள்ளது. இதனைப் போன்றே கல்வியின் மூலம் கிடைக்கின்ற தொழிலின் மதிப்பைவிட தொழிற்கல்வியினால் கிடைக்கின்ற தொழிலின் மதிப்பு குறைவாக சமூக மட்டத்தில் காணப்படுவதனால் பாடசாலைகளில் தொழில் கல்வி வழங்கப்பட்டாலும் மாணவர்கள் குறைவான நாட்டமுடையவர்களாக காணப்படுவதைனை அவதானிக்க முடிகின்றது

- இன்று தொழிலுலகிற்குள் பிரவேசிப்பதற்கான மிக முக்கிய வாயிலாக அமைவது ஆங்கில மொழித்தேர்ச்சியாகும். இவ் ஆங்கில மொழியானது பாடசாலைகளில் போதிக்கப்பட்டாலும் கிராமப்புறங்களைப் பொறுத்தவரை ஆசிரியர் பற்றாக்குறை, பயிற்றப்படாத ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றமை, உரிய தேர்ச்சிகளை பெற்றுக் கொள்ளாமல் வகுப்பேற்றம் செய்யப்படுகின்றமை, ஆங்கில கல்விக்குரிய பொருத்தமான கருவிகள் பாடசாலைகள் தோறும் கிடைக்கப் பெறாமை போன்ற காரணங்களினால் கிராமப்புற மாணவர்கள் நகரப்புற மாணவர்களைக் காட்டிலும் வேலையுலகிற்குள் நுழைய முடியாதவர்களாக காணப்படுகின்றார்கள்.

- மேலும் வாழ்க்கைத்தேர்ச்சியும், குடியுரிமைக் கல்வியும் மற்றும் செயல்முறைத் தொழில்நுட்பம் ஆகிய பாடங்கள் செயன்முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்து கற்பிக்கப்படவேண்டும் என்ற நோக்கத்தை கொண்டிருந்தாலும் அப்பாடங்கள் வழமையான வகுப்பறைக் கற்பித்தலுடன் பெரும்பாலான பாடசாலைகளில் நிறைவு செய்யப்படுகின்றது. இதற்கு காரணம் பாடசாலைகளில் அவற்றைப் போதிப்பதற்கான வசதி வாய்ப்புக்கள் காணப்படாமையே ஆகும். எடுத்துக்காட்டாக பல பாடசாலைகளில் மனைப்பொருளியல் அலகுக்கென தனியான அறை வசதிகள் இல்லை.

## ஆலோசனையும் விதந்துரைப்புக்களும்

இடைநிலைக்கல்வியானது வேலை உலகிற்கு பொருத்தமான வகையில் அமைய வேண்டுமாயின் பூகோளமயமாக்கலின் விளைவுகளையும் அதனால் ஏற்படுத்தப்பட்ட நவீன தொழில்துறைகளையும் நன்கு விளங்கிக்கொண்டு அதற்கேற்றாற்போல் எமது பாடத்திட்டங்களை வகுத்து கொடுப்பதுமல்லாமல் அவற்றை வகுப்பறைகளில் செவ்வனே அமுல்ப்படுத்தக் கூடியவாறு பாடசாலைகளுக்கு வசதி வாய்ப்புக்களையும் வழங்கவேண்டும்.

மாணவர்கள் கற்றுக்கொள்ளுகின்ற தொழிற்கல்விக்குரிய வேலை வாய்பானது கிடைக்கக்கூடியதாக இருப்பதுடன் அத்தொழில்களையும் வருவாய்மிக்க கௌரவமான தொழிலாக உணரக்கூடியதான சூழல்களை உருவாக்கி கொடுத்தல் வேண்டும்

எமது நாட்டின் இடைநிலைக்கல்வியை வேலை உலகிற்கு ஏற்ற வகையில் மாற்றி அமைக்க வேண்டுமாயின் நவீன உலகம் தொழில்சார்ந்து எதிர் பார்கின்ற தொழில்திறன்களை மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்கும் தேவை யான மென்திறன்களை தங்களிடத்தில் வளர்த்துக் கொள்வதற்கும் சிறப்பான தொடர்பாடல் தேர்ச்சிகளை வெளிக்காட்டி தலைமைத்துவப் பண்புகளை உள்வாங்கி கொள்வதற்கு ஏற்றமுறையில் புதிய பாடப்பிர வேசங்கள் அறிமுகப்படுத்தப்படவேண்டும்

வேலை உலகிற்கான கல்விமுறையின் திசைமுகப்படுத்தலினை மேம்படுத்தும் திட்டங்கள் கொண்டுவருவதன் மூலம் வேலையுலகு சார்ந்து சிந்திக்கின்ற வேலையுலகின் தேவைப்பாடுகளை தம்மில் உருவாக்கக்கூடிய செயற்பாடு களில் மாணவர்களை ஈடுபடுத்தல். கலைத்திட்டத்தில் அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்திக் காக முன்னுரிமை வழங்குவதுடன் அதிபர் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அக்கறைசார் கட்சியினர் அவற்றிற்காக உழைத்தல் வேண்டும்.

கல்வியில் தொழில்நுட்பப்பயன்பாடு என்ற கோசத்தை செயற்படுத்து வதற்காக பாடசாலைகள் தோறும் கணினி ஆய்வு கூடங்களை உருவாக்கி ஆசிரியர்களுக்கு தேவையான பொருத்தமான பயிற்சிகளை வழங்கி வினைத் திறன் வாய்ந்த கற்பித்தலை மேற்கொள்வதற்கு வழிசமைப்பதுடன் கற்பித்தல் சாதனங்களையும் வினைத்திறனாகப் பயன்படுத்தல்.

மொழித்திறன்களும் சரளமாக மொழியைப்பயன்படுத்தலும் அவசியமாகும். வேலையுலகில் சிறப்பாக மொழியறிவை பயன்படுத்துவதன் மூல மும் ஆளிடைத் தொடர்புகளை சிறப்பாக பேணுவதன் மூலம் வேலை யுலகில் தம்மை நிலைநிறுத்திக்கொள்ளமுடியும்.

தொழில் வழிகாட்டல் ஆலோசனைக்கு முன்னுரிமை வழங்கல் இவற்றோடு வயது முதிர்ந்த தொழிற்படையின் திறன்களை பின்பற்றுதல் மற்றும் வாசிப்பு எழுதுதல் மற்றும் எண்கணிதம் ஆகியவற்றின் முறையான அடித்தளமின்றி அறிவியல் தொழில்நுட்பம்.

பொறியியல் மற்றும் கணிதம் அகியவற்றின் எதிர்கால உயர்மட்ட விரிவாக்கம் என்பவற்றை பேணுதல் சாத்தியமற்றது. ஆகையால் முறையான அடித்தளங்களை மாணவர்களுக்கு வழங்குதல். குறியீட்டு மற்றும் டிஜிட்டல் திறன்கள் வழங்குதல். இன்றைய வேலையுலகு எண்மப் புரட்சிகளால் வழிநடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. தகவல்களை தன்னகத்தே வைத்திருப்பவர்கள்தான் இன்றைய உலகின் வெற்றியாளர்களாக காணப்படு கின்றார்கள். இவர்களுக்கு தேவையான டிஜிட்டல் தொழில்நுட்ப அறிவு கிடைப்பதற்கு வழிசமைக்கப்படவேண்டும்

தொடர்ச்சியான மென்திறன்கள் வழங்குதல். இன்றய வேலையுலகானது வன்திறன்களை காட்டிலும் மென்திறன்களை எதிர்பார்த்து நிற்கின்றது. இதனால் வேலையுலகில் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் திறன், பிரச்சினைகளை தீர்க்கும் ஆற்றல், புத்தாக்க சிந்தனை, விமர்சன சிந்தனை, இணைந்து செயற்படும் ஆற்றல், சிறந்த தொடர்பாடல் போன்ற திறன்களை இடைநிலைக்கல்வி வழங்கவேண்டும். இத்தோடு இருபத்தோராம் நூற்றாண்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன்களான கற்றல்திறன், எழுத்தறிவுத்திறன் மற்றும் வாழ்க்கைத்திறன் என்பவற்றினையும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்கு ஆவன செய்ய வேண்டும்.

பிராந்திய இடைவெளிகளை அடையாளப்படுத்துவதற்கு கல்வி மற்றும் திறனாக்கல் திட்டங்களை வளர்த்தல் வேண்டும்.

இலங்கையில் இன மற்றும் மொழி அடிப்படையில் கல்வி மற்றும் திறன்களை மாணவர்கள் பெற்றுக்கொள்வதில் பிரதேச அடிப்படையில் வேறு பாடுகள் காணப்படுகின்றன. இவ்வேறுபாடுகளை இனம் காட்டக் கூடிய வகையில் பிரதேசங்களில் குறிப்பாக பெண்கள் மற்றும் விளிம்பு நிலையில் உள்ள மக்களை இலக்கு வைத்து செயற்படுத்தும் கொள்கை கள் உருவாக்கப்படுவதன் மூலம் பொருத்தமான தொழிற்துறையை பொருத்தமான குழுக்களுக்கு வழங்கக்கூடியதாக இருக்கும்.

ஆங்கில மற்றும் டிஜிட்டல் எழுத்தறிவு ஆகியவற்றிலுள்ள பிராந்திய வேறுபாடுகளை சமாளிப்பதற்கு சமூகக் கவனம் தேவையாகவுள்ளது உள்நாட்டு மொழிகளில் டிஜிட்டல் தளங்களை அணுகல் மற்றும் கிராமப்புற இடைவெளிகளை நோக்குகையில் ஆங்கில மொழித்திறனை மேம்படுத்தல் என்பவற்றை முன்னெடுப்பதற்கான முயற்சிகள் தேவை.

இதேபோன்று கிராமப்புற ஆசிரியர்களுக்கு டிஜிட்டல் தொழில் நுட்பங்களை கற்பித்தல் சாதனமாக பயன்படுத்துவதற்கான பயிற்சிகளை வழங்குவதற்கான தேவை அதிகளவில் காணப்படுகின்றது.

இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முனைப்புக் காட்டுதல் அவசியமாகின்றது. இன்றைய நவீன போக்குகளை கவனத்தில் கொண்டு கல்வித்துறையும் மாற்றத்திற்கு உட்படுமாயின் தொழில்த்துறைக்கு ஏற்ற ஒரு மாணவர் பரம்பரையை உருவாக்க கூடியதாக காணப்படும்.

## முடிவுரை

இலங்கையின் இடைநிலைக்கல்வியானது காலத்திற்குக் காலம் பல்வேறு சீர் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு தொழிற்கல்வியை கவனத்தில் எடுத்துக் கொண்டபோதும் அவற்றின் முறையான அமுல்படுத்துகை இன்மையால் எமது மாணவர்கள் தொழில் உலகில் போட்டியிட முடியாதவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகவே காணப்படுகின்றார்கள். இதனால் இடைநிலைக் கல்விக்கும் தொழிலுலகிற்கும் பொருத்தப்பாடு நிலவுகின்றமை கண்கூடாக காணக்கூடியதாகவுள்ளது. எனவே, எமது எதிர்காலத் தலைமுறையானது மாறிவருகின்ற உலக ஒழுங்கிற்கு ஏற்ப இணைந்து வாழக்கற்று வேலையுலகில் தம்மை நிலைநிறுத்திக் கொள்வதற்கு இடைநிலைக் கல்விக்கும் வேலையுலகிற்கும் இடையில் பொருத்தப்பாடு காணப்படவேண்டும்.

**உசாத்துணைகள்**


1. https//www.lkedu.lk>News
2. https://www.asiriyam.com>2020/04



**ம.மரியராசா**

**(B,COM,HNDE,PGDE,M.Ed,Dip IN Counseling,LL.B,)**

**அதிபர்**

**கிளி/வலைப்பாடு றோ.க.த.க.பாடசாலை**

**வலைப்பாடு**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயேசுவின் உயிர்ப்பு ஒரு கட்டுக்கதை அல்ல, நீதி அமைதியாக வெற்றி பெறும் என்ற உண்மை

இயேசுவின் உயிர்தெழுதலை ஈஸ்டர் என உலகக் கிறிஸ்தவர்கள் கொண்டாடுகிறார்கள். யூதாசின் துரோகத்தனத்தால் ஏற்பட்ட கொடூரத்தைப் புரிந்து கொள்ளமுடியாத நிலமை. நம்பியிருந்தவர்களை நடுத்தெருவில் விட்ட கதை. அன்பான சீடர்கள் ஓடியொளித்துக் கொண்ட சூழல். இந்நிலையை மாற்ற உயிர்த்த இயேசு தம்மைக் காண்பிக்க வேண்டிய நிலை. அது மாத்திரமல்ல. இயேசுவைச் சிலுவைக்கு ஒப்புக்கொடுத்து சிலுவையில் அறைந்து கல்லறையில் அடக்கமும் செய்து ஏவவாளிகள் காவலாளிகளாக கல்லறைக்கு முத்திரையும் பதித்து நின்ற சூழல். மதத் தலைவர்கள், மூப்பர்கள், அரசியல் அடிவருடிகள், குதூகலித்து நின்ற நேரம். இதற்கெல்லாம் காரணம் இயேசுவைக் கொன்றுவிட்டோம் என்ற மமதை. இம் மமதை மூன்றே மூன்று நாள்கள் மட்டும் நிலைத்திருந்தது. மரணத்தின் ஓலம். மூன்றே மூன்று நாள்கள் தான். மூன்றாம் நாள் ஆண்டவர் உயிர்தெழுந்த தினால் இவர்களும் அடங்கிப் போனார்கள். அநீதியும் அக்கிரமமும் அதிக நாள்கள் நீடிக்காது. அநீதி செய்பவர்கள் குதூகலிப்பார்கள். ஆனால் நீதி அமைதியாக வெற்றி பெறும். இது உலகம் தந்த பாடம். மாத்திரமல்ல கிறிஸ்தவ உண்மையும் கூட. நீதியின் இறைவன் மனித மனங்களில் உயிர்ப்பை, நம்பிக்கையை கொடுக்கத் தொடங்கிய நாள் உயிர்ப்பின் நாள். உயிர்தெழுதலை அன்றும், இன்றும் பல இறையியலாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர் என்பது நாமறிந்ததே. இயேசுவின் உடல் கல்லறில் வைத்து பெரிய கல்லைக் கொண்டு வாயிலை அடைத்துப் படைவீரர்களைக் கொண்டு காவல் செய்தது உயிர்த்தெழுதலை தடுப்பதற்கே ஆகும்.

ஆனால், கல்லறை காலியாக, இயேசு உயிர்பெற்றெழுந்தார். கத்தோலிக்கர் கள் கொண்டாடுகின்ற திருவிழாக்களிலெல்லாம் தலைசிறந்த விழா இயேசுவின் இந்த உயிர்ப்புப் பெருவிழா ஆகும். ஏனெனில், அது கத்தோலிக்க விசுவாசத்தின் பொருவிழா. கத்தோலிக்க வாழ்வுக்கு அடித்தளமாக இருந்து அர்த்தம் தருவது இயேசவின் உயிர்ப்பே என்றால் மீகையாகாது. இயேசு உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும் என்று புனித பவுல் பைபிளில் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவின் சக்திகள் இறைவன் முன் பலமற்றவை என்ற செய்தியை எமக்குப் பறைசாற்றிக் கொண்டேயிருக்கிறது. சித்திரவதை செய்து கொல்லப்பட்ட மனிதன் மீண்டும் உயிர்பெற்று எழுந்தார் என்று கூறுவது மடமைத்தனம். எவன் நம்புவான்? என்ன ஆதாரம்? எங்காவது இறந்தவன் உயிர்பெற்று எழுவதுண்டா? இயேசு உண்மையாகவே உயித்து விட்டாரா? இயேசுவைப் பற்றி முழுமையாய் அறிந்திராதவர்கள் மனதில் நுனிப்புல் மேய்ந்த பசுப்போன்று, எல்லோர் மனத்துள்ளும் எழும் கேள்வி இதுதான் எனலாம்.

ஹார்வர்ட் பல்கலைக்கழகச் சட்டப் பேராசிரியரும் இங்கிலாந்து நாட்டின் நோட்டிங் ஹாம் என்கிற இடத்திலுள்ள தூயயோவான் கல்லூரி முதல்வருமான கலாநிதி மைக்கல் கிரீன் லீப் உலகப் புகழ்மிக்க “சட்ட சாட்சியர் தொகுதி” என்னும் நூலாசிரியர் ஆவார். இவர் இயேசு உயிர்த்ததற்கான சாட்சியம் பற்றிய ஆய்வில் ஈடுபடுகையில் மேற்குறிப்பிட்ட வாறு இயேசுவின் உயிர்ப்பு வெறும் கட்டுக்கதை என்று கருதினார். ஆனால் பைபிளை ஆழமாகப் படித்து, ஆராய்ந்து, ஆழ்ந்து சிந்தித்தபின் பைபிளில் மறுக்க முடியாத ஆதாரமுள்ள உயிருள்ள சாட்சிகள் உண்டு என்று கண்டறிந்தார். உயிர்ப்புக் குறித்த ஐயத்திலிருந்து உண்மை அவரை விடுதலை செய்தது. ஆக்சுபோர்டு பல்கலைக்கழக மாணவர்கள் இருவரும் அவரைப் போலவே மறுத்துவந்து பின் உண்மை ஆதாரங்களை அறிந்து உணர்ந்து மனம் மாறினர் - கலாநிதி மைக்கல் கிரீன் எழுதினார்: “இயேசு உயிர்க்கவில்லை என்றால் அவருடன் வாழ்ந்த சீடர்கள் ஓர் உண்மையை உறுதிப்படுத்தியிருக்க முடியாது! ஏனென்றால் அந்த உண்மையை உலகறியச் சாட்சியம் கூறியதற்காக அவர்கள் அடித்து நொறுக்கப்பட்டார்கள் மறுத்துக கூறுமாறு சிறையில் அடைக்கப்பட்டார்கள் உண்மைக்குச் சான்று பகர உயிரையும் கொடுத்தார்கள்” - உயிர்ப்புக்கு உயிருள்ள சாட்சிகள் அவர்களே என்கிறார். “இயேசு ஒரு போலி மெசியா. தந்தை யாவேயைப் பழித்துப் பேசியவர். அவரது பெயரால் உருவான கிறிஸ்தவத்தை அடியோடு ஒழித்துக் கட்டவேண்டும்.” என்று முழுமூச்சுடன் செயல்பட்டவர் சவுல். உரோமர்களிடமிருந்து கிறிஸ்தவர்கள் யார்? கிறிஸ்தவம் பரப்புவோர் யார்? என்ற ஆவண விவரங்களுடன் அவர்களைச் சிறைப்பிடித்துக் கொல்லவேண்டும் என்று தமஸ்கு நோக்கிப் பயணம் செய்த சவுல் உயிர்த்த இயேசுவினால் தடுத்தாளப்பட்டார் கி.பி.67இல். அவர் வாழ்வே உயிர்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவுக்கு ஆதாரமான சாட்சியம்! என்று எழுதி கலாநிதி மைக்கல் கிரீன ஓர் ஆய்வு நூலை வெளியிட்டார். ஒருமுறை இங்கிலாந்து நாட்டுத் தலைமை நீதி அரசராக இருந்த மேன்மைமிகு லார்ட் டார்லிங் கூறுகிறார்:

"ஏற்கெனவே காணக்கிடைத்துள்ள அளவுக்கு அதிகமான சாட்சியங்கள் பலபல. உடன்பாடான சாட்சியங்கள், சூழ்நிலைச்சாட்சியங்கள், உண்மைச் சாட்சியங்கள் போன்றவற்றின் அடிப்படையில் உலகின் அறிவாற்றல் மிக்க எந்த நீதியரசரும் இயேசு உயிர்த்த செய்தி மெய்யே என்று தீர்ப்பு வழங்கத் தவறமாட்டார்". ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் தாமஸ் ஆர்னால்டு "உரோமானியர் வரலாறு" என்னும் ஆராய்ச்சி நூலை ஆக்கியவர்: வரலாற்று, விழிகளையே மூடி விட்டால்தான் இயேசு உயிர்ப்பை மறுக்க முயலமுடியும் என்று எழுதினார். அவர் "வரலாறு குறித்த நோக்குகளும் இயேசு உயிர்த்ததற்கான சான்று களும்" என்னும் ஆய்வுநூலை வரலாற்று ஆதாரங்களுடன் வெளியிட்டார். பைபிளை முழுமையாக வாசித்த எவராலும் இயேசுவின் உயிர்ப்பு ஒரு கட்டுக்கதை என்று கற்பிதம் செய்யவே முடியாது என்றார். இயேசு உயிர்த்தெழுந்த உண்மைக்கு 500க்கு மேற்பட்ட சாட்சியங்கள் உள்ளன. மகதலாமரியா முதற்சாட்சி. கதவைப் பூட்டி உள்ளே அஞ்சி நடுங்கிய சீடர்கள் 11 பேர், எட்டு நாள் பின்னர் தோமா உள்ளிட்ட சீடர்கள், பின்பு திபேரியக் கடல் அருகே பேதுரு, திதிம்தோமா, நத்தனியேல், செபதேயுவின் மக்கள், மீண்டும் எம்மாவுஸ் சீடர் இருவர். பின்பு ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட சகோதரர் சகோதரிகளுக்கு ஒரே நேரத்தில் தோன்றினார். கடைசியில் எனக்கும் தோன்றினார் என்கிறார் பவுல் அடியார். எனவே இயேசு உயிர்த்தார் நம்மோடு உயிரோடு இன்றும் வாழ்ந்துகொண்டே இருக்கின்றார். நாம் சாட்சிகளாவோம்.

**ம.பிரான்சிஸ்க்**
**(கத்தோலிக் சுதந்திரப் பத்திரிகையாளர்)**
**ஆசிரியர்**
**தொடர்பாடலும் ஊடக கற்கையும்**
**யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர தேசிய பாடசாலை**
**பருத்தித்துறை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனது பணியில் வகுப்பாசிரியராக...



மெகா பதிப்பகம் 021 221 7939

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org